**பொ.து.ந.க.எண்.இ7/26037/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/1130/2021**

**தீர்மானஎண்.746/2021** **நாள்:27-09-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை திருமதி. ஜெ மெருலா, தாய்சேய்நல அலுவலர், பெருங்குடி மருத்துவ மண்டல அலுவலம் -14 அவர்கள் 29.09.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, பெருங்குடி மருத்துவ மண்டல அலுவலகத்தில் தாய்சேய்நல அலுவலராக பணிபுரியும் திருமதி. ஜெ மெருலா அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வு வேண்டி 02.07.2021 நாளிட்ட கடிதம் சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களுக்கு அளித்துள்ளார்.

திருமதி. ஜெ மெருலா அவர்கள் 18.07.1995 அன்று பணிச்செவிலியராக பணியில் சேர்ந்து 27.09.2019 அன்று தாய்சேய் நல அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு பணிச்செவிலியர் பதவியில் 18.07.1995 அன்று பணிவரன்முறைப்படுத்தியும் 29.07.1997 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் தாய் சேய் நல அலுவலர் பதவியில் 27.09.2019 அன்று பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர்களின் 05.08.2021 மற்றும் 07.08.2021 நாளிட்ட கடிதங்களில், தனியர் பணிபுரிந்த காலங்களில் தனியர் மீது முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர் -2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 17.08.2021 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஓழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 23.08.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை தணிக்கை பிரிவின் 07.09.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் 18.07.1995 முதல் 26.09.2019 வரை பணிச்செவிலியர் மற்றும் 27.09.2019 முதல் 31.03.2020 வரை பெறப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையின்படி, தனியர் மீது தணிக்கை தடை இல்லை தணிக்கை தடை பின்னர் தெரியவரின் தனியரே அதற்கு பொறுப்பாவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (குறிப்பு : 2020-2021 மற்றும் 2021-2022 தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை)

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 13.08.2021 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 05.08.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் என்றும், நிலுவை தொகை இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 54 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 26 ஆண்டுகள் 02 மாதங்கள் 13 நாள் ஆகும். தனியர் சம்பளமில்லா விடுப்பு துய்க்கவில்லை. தனியர் விதிகளின்படி வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2027 ஆகும்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 26 ஆண்டுகள் 02 மாதங்கள் 13 நாள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை 29.09.2021 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

**<u>பொ.து.ந.க.எண்.இ7/26037/2021 &</u>**

**<u>ம.சே.து.ந.க.எண்.எப்5/1130/2021</u>**

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. ஜெ மெருலா, தாய்சேய் நல அலுவலர், பெருங்குடி மருத்துவ மண்டலம் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, *2020 – 21* மற்றும் *2021 – 22* ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளிவந்தவுடன் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை *29.09.2021* அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**சு.து.ந.க.எண். பி2 / 5176 /2021**

**தீர்மானஎண்.747 / 2021** **நாள்:27-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை- நோவல் கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் டெங்கு போன்ற இதர தொற்றுநோய் பணிகள் மேற்கொள்ளவும் - பயிற்சி பெற்ற 200 சுகாதார ஆய்வாளர்களை ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 25,000/- வீதம் (மாத ஊதியம் ரூ. 20,000/- மற்றும் தங்குமிடம், உணவு படியாக ரூ.5,000/) ஊதியத்தில் 03.07.2020 முதல் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த M/s.G.S.Enterprises நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிகாலம் 02.07.2021 ல் முடிவடைவது - எனவே பயிற்சி பெற்ற 140 சுகாதார ஆய்வாளர்களை ஒரு வருட காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) பரவாமல் தடுக்க பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரையில் உள்ள 140 கோட்டங்களில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) தடுப்பு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் கோட்ட அளவில் சுகாதார ஆய்வாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுகாதார ஆய்வாளர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- கொரோனா நோய் உறுதி செய்யப்பட்டவர்களின் விவரம் பெற்றவுடன் அவர்களின் வீட்டினை ஆய்வு செய்து உறுதி செய்தல்
- கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உறுதி செய்யப்பட்டவர்களை பரிசோதனை மையத்திற்கு (Covid Screening Center) அனுப்பி அங்கிருந்து மருத்துவ அலுவலரால் நோய் தன்மைக்கு ஏற்ப மேல்சிகிச்சைக்காக மருத்துவனைக்கு அல்லது கோவிட் பராமரிப்பு மையத்திற்கு அல்லது வீட்டில் தனிமைப்படுத்தி கொள்ள வசதி உள்ளவர்களை வீட்டில் தனிமைப்படுத்த அனுப்பி வைத்தல்.
- நோய் பாதிக்கப்பட்டவரின் உடன் இருப்பவர்களுக்கு நோய் அல்லது நோய் அறிகுறி இருப்பதை கண்டறிதல் (conduct tracing)
- நோய் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காய்ச்சல் மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்தல் மற்றும் நடமாடும் மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்தல்.
- வீடு வீடாக சென்று ஆய்வு செய்யும் பணியாளர்களை மேற்பார்வை செய்தல்
- ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்களை கண்டறிதல்
- ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்களை அதே நாளிலேயே பரிசோதனை செய்தல்.
- பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் அனைத்து தரவுகளையும் *(Datas)* இணையத்தில் *(Web portal)* பதிவேற்றம் செய்தல்.
- கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உறுதி *(Positive Case)* செய்யப்பட்டவர்களை பின் தொடர்தல்*(Follow up)*.
- கபசுர குடிநீர் மற்றும் விட்டமின் மாத்திரைகள் வழங்குவதை உறுதி செய்தல்
- முககவசங்கள் வழங்குவதை மேற்பார்வை செய்தல்.
- கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றாதவர்களுக்கு அபராதம் விதித்தல் மற்றும் நடவடிக்கை எடுத்தல்
- வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை பின் தொடர்தல்*(Follow up)*.
- தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் திட்டங்களுக்கு உதவி செய்தல்
- பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அளித்தல்
- கோவிட் நோயினால் இறந்தவர்களின் உடல்களை விதிமுறைகளின்படி இடுகாடு/சுடுகாட்டில் அடக்கம் செய்தல்.

- சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர்களுக்கு அசதாரணமான சுகாதார நிகழ்வுகளை (Abnormal Health Events) தெரிவித்தல்.
- தினந்தோறும் அன்றாடம் நிகழும் நிகழ்வுகள் குறித்த அறிக்கைகள் அளித்தல்.

எனவே, நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) தடுப்பு நடவடிக்கையில் சுகாதார ஆய்வாளர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமாக அமைகின்றது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு கோட்டத்திற்கு ஒரு சுகாதார ஆய்வாளர் என்ற வீதத்தில் 200 கோட்டத்திற்கு 140 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் (Birth and Death Registrars) 30 மொத்தம் 230 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 108 சுகாதார ஆய்வாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 122 காலிப்பணியிடங்கள் உள்ளன.

தற்போதைய நிலையில் காலியாக உள்ள 122 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களிலும், மேலும், நோய் தொற்று அதிகம் உள்ள இடங்களில் கூடுதலாக சுகாதார ஆய்வாளர்களை நியமிக்கும் பட்சத்தில் தொற்றுநோய் தடுப்பு பணிகளை மேலும் சிறப்புடன் துரிதமாகவும் மேற் கொள்ள இயலும் என்ற காரணத்தினாலும் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் சுகாதார ஆய்வாளர்கள் தொடர்ந்து கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு, அந்த கோட்டங்களிலும் சுகாதார பணிகள் பாதிக்கப்படும் சூழ்நிலையிலும்., சிறப்பு அதிகாரி/ மன்றத்தீர்மான எண். 429/2020 நாள்.01.07.2020ன்படி 140 சுகாதார ஆய்வாளர்கள் 03/07/2020 முதல் 02/07/2021 வரையில் ஒரு வருட காலத்திற்கு மாத ஊதியம் ரூ.20,000/த்துடன் உணவு, வாகன செலவினம் மற்றும் தங்குமிடத்திற்கான படியாக *(allowance)* ரூ.5,000/சேர்த்து மாதம் ரூ.25,000/ த்தில் M/s. GS.Enterprises நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு மேலும் இந்த பணியாணை 03.07.2021 முதல் 02.10.2021 வரை 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டுள்ளது.

மேலும், நோய் தொற்று தற்போது சற்றே குறைந்திருப்பினும், மீண்டும் மூன்றாவது அலை வரும் என எதிர்நோக்கும் நிலையில் கொரோனா தடுப்பு பணியானது தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், டெங்கு போன்ற மற்ற நோய்த்தடுப்பு நடடிவக்கைகளுக்கும் சுகாதார ஆய்வாளர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதால், ஏற்கெனவே உள்ள சுகாதார ஆய்வாளர்களுக்கு உதவியாகவும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் கோட்டத்திற்கு ஒரு சுகாதார ஆய்வாளர் கூடுதலாக மொத்தம் 140 சுகாதார ஆய்வாளர்களை ஒரு வருட காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கலாம்.

**Qualification of Sanitary Inspector As per GCC Bye-Laws**

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Sanitary Inspector | 1. B.Sc. Degree with Chemistry in main subject.<br>2. Post Graduate Diploma in Sanitary Inspector Course conducted by Government and Institutions recognized by the Government<br>3. Any Certification in Computer Courses. |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.560/2020 நாள்.21.08.2020ல் ஒப்பந்ததாருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) (GST வரி நீங்கலாக) வழங்க அனுமதி அளித்துள்ளது.

| Employee's State Insurance (Salary upto Rs.21000) | | Employee's Provident Fund(Salary upto Rs.15000) | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**Office Workable Rate**

| Sl. No | Name of the post | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4++6) | Total (3+4+5+6+7) | Required Number | Total one year Rs (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | Sanitary Inspector | 20000 | 5000 | 25000 | 0 | 650 | 2500 | 5067 | 33217 | 140 | 5,58,04,560 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் டெங்கு போன்ற இதர நோய்களின் தடுப்பு பணிகளை மேற்கொள்ள 1 முதல் 15 மண்டலங்களில் கோட்டத்திற்கு ஒன்று வீதம் பயிற்சி பெற்ற 140 சுகாதார ஆய்வாளர்களை ஒருவருக்கு மாதத்திற்கு ரூ.25,000/-வீதம் (மாத ஊதியம் ரூ.20,000/- மற்றும் தங்குமிடம், உணவு படியாக ரூ.5,000/-) ஊதியத்தில் ஒரு வருட காலத்திற்கு 03.10.2021 முதல் 02.10.2022 வரை வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.5,58,04,560/- (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்து எட்டு லட்சத்து நான்காயிரத்து ஐந்நூற்று அறுபது மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
3. 140 சுகாதார ஆய்வாளர்களை பொது சுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரி பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும்,
4. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு *(*சுகாதாரம்*)*, நிலைக்குழு*(*வரி விதிப்பு மற்றும் நிதி*)* மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Deputy Commissioner (R&F) remarks dated.24.09.2021 as follows:**

**“May be further reduced to 110 and for 6months. since time is less, we may give 7days for tender”**

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“With Deputy Commissioner (R&F) remarks, *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**சுது.நக.எண். B2/ 6394/2021**

**தீர்மானஎண்.748 / 2021** **நாள்:27-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - மண்டலம் 4,5,6,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்கள் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி சித்தா மற்றும் ஹோமியோபதி) மருத்துவர்கள்,மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் தேவையான மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் 01.08.2020 முதல் M/s. Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 31.07.2021ல் முடிவடைவது - இப்பணியினை மேலும் ஒரு வருட காலத்திற்கு மின்னனு ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் மண்டலம் 4,10 மற்றும் 13ல் மூன்று ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி (Ayurveda, Yoga & Naturopathy, Unani, Siddha, Homeopathy)) 04.03.2016ல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இங்கு ஐந்து வகையான இந்திய மாற்று மருத்துவசேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இந்த மருத்துவ சேவைகளுக்கு தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவசார் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

| வஎண் | மண்டலம் | ஆயுஷ் மருத்துவமனைகள் |
|---|---|---|
| 1 | 4 | மீனாம்பாள் நகர் நகர்ப்புற சமுதாய நல மையம் |
| 2 | 10 | லலிதாபுரம் மாநகராட்சி மருத்துவமனை |
| 3 | 13 | திருவான்மியூர் நகர்ப்புற சமுதாய நல மையம் |

மண்டலம் 5ல் கோட்டம் 58, EVK சம்பத் சாலை, வேப்பேரி மருந்தகம், சென்னை -7 செயல்பட்டு வரும் ஹோமியோபதி மருத்துவமனையில் மருத்துவர் வயது முதிர்வின் காரணமாக 30.04.2017 அன்று பணி ஓய்வு பெற்று விட்டதாலும், மண்டலம் 6ல் செம்பியம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் செயல்பட்டு வரும் யுனானி மருத்துவமனையில் மருத்துவர் மற்றும் மருந்தாளுனர் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்று விட்டதாலும், மண்டலம் 9 எண்.1, நமசிவாயம் தெரு, திருவல்லிகேணி, சென்னையில் செயல்பட்டு வரும் ஆயுர்வேதா மருந்தகத்தில் பணி புரிந்து வந்த மருந்தாளுனர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2017ல் ஓய்வு பெற்று விட்டதால் இந்த இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்

**அட்டவணை எண்.1**

| Sno | Zone | Place | Name of the Post | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | MO | Pharmacist | Therapeutic Assistant(Male) | Therapeutic Assistant (Female) | Multi Purpose worker |
| **AYUSH CLINICS** | | | | | | | |
| 1 | 4 | Meenabal Nagar UCHC | 5 | 1 | 1 | 1 | 5 |
| 2 | 10 | Lalithapuram Corporation Hospital | 5 | 1 | 1 | 1 | 5 |
| 3 | 13 | Thiruvanmiyur UCHC | 5 | 1 | 1 | 1 | 5 |
| **UNANI DISPENSARY** | | | | | | | |
| 1 | 5 | Corporation Unani Dispensary Bala Muthu Steet, Chennai-2 | 1 | 1 | - | - | 1 |
| 2 | 6 | Corporation Unani Dispensary Sembium , Chennai-11 | 1 | 1 | - | - | 1 |
| **HOMEPATHY DIPENSARY** | | | | | | | |
| 1 | 5 | Corporation Homeopathy Dispensary , EVK Sampath Salai, Vepery, Chennai-7 | 1 | - | - | - | - |

| AYURVEDIC DISPENSARY | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | Corporation Ayurvedic Dispensary , No.1m Namasivayam Street, Tripilicane, Chennai | - | 1 | - | - | - |
| | | Total | 18 | 6 | 3 | 3 | 17 |

சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.077/2020 நாள்.29.01.2020 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.511/2020 நாள்.28.07.2020ன்படி மேற்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட ஆயுஷ் மருத்துவமனைகளுக்கு தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவசார் பணியாளர்கள் 01.08.2020 முதல் M/s. Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 31.07.2021ல் முடிவடைகின்றது.

**அட்டவணை எண்.2**

| Sl. No | Category of Staff | Salary per Month (Rs) | 5% Annual Increment | Total | ESI (13%) (Rs) | ESI (3.25%) (Rs) | Administrative Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required of Staff | Total 12 months Rs (8x9x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 634 | 5784 | 37918 | 3 | 1365048 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 634 | 5784 | 37918 | 3 | 1365048 |
| 3 | Unani-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 634 | 5784 | 37918 | 5 | 2275080 |
| 4 | Siddha-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 634 | 5784 | 37918 | 3 | 1365048 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 634 | 5784 | 37918 | 4 | 1820064 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 500 | 10500 | 1365 | 341 | 246 | 2241 | 14693 | 3 | 528948 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 500 | 10500 | 1365 | 341 | 246 | 2241 | 14693 | 3 | 528948 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 500 | 10500 | 1365 | 341 | 246 | 2241 | 14693 | 6 | 1057896 |
| 9 | Multipurpose worker | 8000 | 400 | 8400 | 1092 | 273 | 197 | 1793 | 11755 | 17 | 2398020 |
| | Total | | | | | | | | | 47 | 1,27,04,100 |

இதில் ஓராண்டு காலம் பணி முடித்தவர்களுக்கு 5% வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த வெளிநிறுவனம் மூலம் பணியமர்த்தலாம்.

**அட்டவணை எண்.3**

**Qualification**

| Sl. No | Category of Staff | Required Number of Staff | Qualification |
|---|---|---|---|
| 1 | Ayurveda-Doctor | 3 | BAMS from recognized university |
| 2 | Yoga and naturopathy-Doctor | 3 | BNYS from recognized university |

| | | | |
|---|---|---|---|
| 3 | Unani-Doctor | 5 | BUMS from recognized university |
| 4 | Siddha-Doctor | 3 | BSMS from recognized university |
| 5 | Homeopathy-Doctor | 4 | BHMS from recognized university |
| 6 | Therapeutic Assistant for Yoga and Naturopathy (Male) | 3 | Diploma in Nursing therapist |
| 7 | Therapeutic Assistant for Yoga and Naturopathy (Female) | 3 | Diploma in Nursing therapist |
| 8 | Pharmacist ( Ayurveda, Unani Siddha and Homoeopathy ) | 6 | Diploma in integrated pharmacy (Ayurveda, Unani ,Siddha and Homoeopathy) |
| 9 | Multipurpose worker | 17 | - |
| | Total | 47 | |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.511/2020 நாள்.28.07.2020ல் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) (GST வரி நீங்கலாக) வழங்க அனுமதி அளித்துள்ளது.

| Employee's State Insurance (Salary upto Rs.21000) | | Employee's Provident Fund(Salary upto Rs.15000) | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

<u>அட்டவணை எண்.4</u>

| Sl. No | Category of Staff | Salary per Month (Rs) | 5% Annual Increment | Total | ESI (13%) (Rs) | ESI (3.25%)(Rs) | Administrative Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required Number of Staff | Total 12 months Rs (8x9x 12M) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 3150 | 6237 | 40887 | 3 | 1471932 |
| 2 | Yoga and naturepathy-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 3150 | 6237 | 40887 | 3 | 1471932 |
| 3 | Unani-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 3150 | 6237 | 40887 | 5 | 2453220 |
| 4 | Siddha-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 3150 | 6237 | 40887 | 3 | 1471932 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 1500 | 31500 | 0 | 0 | 3150 | 6237 | 40887 | 4 | 1962576 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 500 | 10500 | 1365 | 341 | 1221 | 2417 | 15844 | 3 | 570384 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 500 | 10500 | 1365 | 341 | 1221 | 2417 | 15844 | 3 | 570384 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 500 | 10500 | 1365 | 341 | 1221 | 2417 | 15844 | 6 | 1140768 |
| 9 | Multipurpose worker | 8000 | 400 | 8400 | 1092 | 273 | 977 | 1934 | 12676 | 17 | 2585904 |
| | Total | | | | | | | | | 47 | 13699032 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மண்டலம் 4,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்கள் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி சித்தா மற்றும் ஹோமியோபதி) மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் மேலும் ஒரு வருட காலத்திற்கு 01.08.2021 முதல் 31.07.2022 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.1,36,99,032/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தி ஆறு லட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து முப்பத்தி இரண்டு மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. இப்பணிக்கென பொதுசுகாதாரத்துறை தலைமையிடம் மூலம் மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 25.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*** * * * * ***

**ம.அ.6நக.எண்.அ11/365/2021**

**தீர்மான எண். 749/2021** **நாள்:27-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6 - சுகாதாரத்துறை பூச்சி தடுப்புதுறை - கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார தொழிலாளர்கள் (NULM) SHG மூலம் 95 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டது 29.09.2021 முதல் பணிகாலம் முடிவடைவது - பணியாளர்களை மேலும் 30.09.2021 முதல் 29.09.2022 வரை ஓராண்டு காலத்திற்கு பணியமர்த்தவும் - அதற்கான செலவினத் தொகை நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, சுகாதாரத்துறை, பூச்சித்தடுப்பு துறை, சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மானம் எண்.726/2020, நாள் 05.10.2020ன் படி, மண்டலம்-6, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள் கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளவும் 95 பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் குழுக்கள் அமைத்து பணியமர்த்த மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே பணிபுரிந்து வரும் 95 (NULM) SHG பணியாளர்களின் பணிகாலம் 30.09.2020 முதல் 29.09.2021 வரை முடிவடைகிறது. இப்பணிகளை அவசியம் கருதி தொடர்வது அவசியமாகிறது.

தற்போது பணிபுரிந்து வரும் 95 நபர்களின் பணிக்காலம் வருகின்ற 29.09.2021 அன்று முடிவடைவதால் மேலும் ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

அ) மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின்படி மண்டலம்-6க்கு அனுமதி அளிக்கப்பட 95 பணியாளர்களை மண்டலம்-6 பூச்சித்தடுப்பு பிரிவிற்கு (தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் 30.09.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டுக்கு பணியமர்த்தவும்,

ஆ) இப்பணிக்கான செலவீனத் தொகை திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, (நபர் நாள் ஒன்றுக்கு ரூ.410 வீதம் 95 நபர்களுக்கு) 365 நாட்கள் = ரூ.1,42,16,750/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து பதினாறாயிரத்து ஏழுநூற்று ஐம்பது மட்டும்) மண்டலம்-6 பகுதி கணக்கு குழுமத்தின் (NULM) SHG மூலம் குழுக்களுக்கு ஊதியம் வழங்க குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 தலைப்பில் ஒதுக்கீடு செய்து மண்டல அளவில் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும்,

இ) மன்றத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி மேற்சொன்ன 95 பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN07/0448/2021***

**தீர்மானஎண்.750/2021** **நாள்:27-09-2021**

# தானப்பத்திரம்

மண்டலம்-7, கோட்டம்-86ல் M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh அவர்கள் S.No.431/2A, பட்டாவின் படி T.S.No.4/1 Block No.10 அத்திப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN07/00448/2021 நாள்: 13.08.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள் 09.12.2020 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh மனைப்பிரிவில் சாலை மற்றும் பொதுபயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ)M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh ஆகியோர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி மொத்த பரப்பளவு 4793.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 678.25 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென 20.22 ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(ஆ)M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ)விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 7.20 மீட்டர் அகலம் உள்ள சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 7.20ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ)Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன் படி *10,000* ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

*(உ)*மனைப்பிரிவின் பரப்பளவு 10,000 ச.மீ க்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாக அளிப்பதற்கு ஈடாக தொகையினை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ)Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh அவர்கள் அதற்கேற்றவாறு 20.22 சதுர மீட்டர் பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 20.22 சதுர மீட்டர் பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

**ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN07/0448/2021***

(எ)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.9,85,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 678.25 சதுர மீட்டர் பரப்பளவு நிலமும், பொது பயன்பாட்டிற்காக 20.22 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினையும் தானபத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) S.No.431/2A பட்டாவின் படி T.S.No.4/1 Block No.10 அத்திப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 678.25 சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 20.22 சதுர மீட்டர் நிலத்தினையும் M/s. Kaaviya Enterprises Rep by its Partners S. Premkumar மற்றும் K. Vignesh அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.9,85,000/- ஐ(ரூபாய் ஒன்பது லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடமிருந்து “முதன்மை செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி” என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்.

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம், *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க..எண்.பி1/1115/2021**

**தீர்மானஎண்.751/2021** **நாள்:27-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு 2021-2022 - கட்டடத்துறை - மண்டலம்-9, வார்டு-125, லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணிக்காக ரூ.9,97,00,000/-க்கு 2020-2021 ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-9,வார்டு-125,லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் – 9 |
| 3 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2020-2021 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 4 | மதிப்பீட்டின் தொகை | ரூ.9,97,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 7,97,70,372.95 |
| | (ஆ) மேலாண்மை மேற்பார்வை செலவு | ரூ. 55,83,926.11 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 13,95,981.53 |
| | (ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 7,97,703.73 |
| | (உ) எதிர்பாரா செலவு | ரூ. 8,34,163.48 |
| | (ஊ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 95,72,444.75 |
| | (எ) மின்சாரக்கட்டணம் | ரூ. 1,50,000.00 |
| | (ஏ) கலந்தாய்வாளர் கட்டணம் | ரூ. 15,95,407.46 |
| | **மொத்தம்** | ரூ. **9,97,00,000.00** |
| 5 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 6 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 7 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண். | மூலதன நிதி |
| 8 | Ïக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. **9,97,00,000.00/-** |

மண்டலம்-9, வார்டு-125, லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி அமைப்பதற்கு *2020-2021* ஆம் ஆண்டின் விலை பட்டியலில் இல்லாத இனங்களுக்கு விலை விவரப்பட்டிக் குழு வைத்து தீர்வு செய்வதற்காக அனைத்து தலைமைப் பொறியாளர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இதில் தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் முதன்மை தலைமை பொறியாளர் அவர்கள் பதவி இல்லாததால், அக்குழு முழுவதுமாக கலைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட துறை சார்ந்த அனைத்து கோப்புகளும் அந்தந்த தலைமை பொறியாளர்கள் வாயிலாக சம்மந்தப்பட்ட துணை ஆணையர்கள் /இணை ஆணையர்கள் வழியாக முதன்மை செயலர் /ஆணையர் அவர்களுக்கு கோப்புகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் தெரிவித்துள்ளார்.

**க.து.ந.க..எண்.பி1/1115/2021**

மேலும், மேற்கண்ட விலை விவரப்பட்டிக் குழுவிற்கு சமர்ப்பித்த குறிப்பில் அனைத்து துறை மேற்பார்வை பொறியாளர்கள், தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் தவிர மற்ற தலைமை பொறியாளர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளதால் விலை பட்டியலில் இல்லாத இனங்களுக்கு தான் விலைப்புள்ளி ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால், இதனையே ஒப்புதலாக கருதப்படுகிறது.

எனவே, மண்டலம்-9, வார்டு-125, லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணிக்காக ரூ.9,97,00,000/-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சம் மட்டும்) 2020-2021 ஆம் ஆண்டின் விலையின்படியும் மற்றும் 2020-2021ஆம் ஆண்டின் விலை பட்டியல் இல்லாத இனங்களுக்கும் ஒப்புதல் அளிக்கும்படியும், மேலும், தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மதிப்பீட்டிற்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.7.ந.க.எண். எச்2/1552/2021**

**தீர்மான எண். 752/2021** **நாள்:29-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 - கொரோனா தொற்று இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கை - தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்ட FSW பணியாளர்களுக்கு ஜீலை-2021 மற்றும் ஆகஸ்ட்-2021 மாதத்திற்கான ஊதியம் வழங்கப்பட்டது - துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் ஆணையின்படி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு 105 FSW பணியாளர்களை செப்டம்பர்-2021 மாதத்திற்கு தற்காலிகமாக பணியமர்வு செய்யஅனுமதி.**

சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண். 446/2021 நாள்.04.05.2021ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ல் கொரோனா இரண்டாவது அலையில் வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு 79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், கோவிட் தடுப்பூசி விவரங்கள் கணக்கெடுத்து தடுப்பூசி வழங்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு பணிக்கு ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 922 பணியாளர்களை (Field Survey Worker) 08.04.2021 முதல் 30.06.2021 வரை 84 நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணியமர்த்தப்பட்ட 922 (Field Survey Worker) பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 08.04.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.391/. வீதம் கணக்கிடப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பணியமர்த்தப்பட்டுள்ள (Field Survey Worker) பணியாளர்களின் பணிக்காலம் 30.06.2021 அன்று முடிவடைந்தது. முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.06.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின் படியும் மற்றும் ICMR வழிகாட்டுதலின்படியும் தற்போது கொரோனா நோய் தொற்று குறைந்து வரும் நிலையில், கொரோனா தடுப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஏதுவாக ஏற்கனவே தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 922 (Field Survey Worker) பணியாளர்களில் 60 சதவீதம் குறைத்து மண்டலம்-7 ல் கோட்டம்-79 முதல் 93 வரை 369 எண்ணிக்கையிலான (Field Survey Worker) பணியாளர்களை மட்டும் உட்படுத்தி கொள்ளவும், 01.07.2021 முதல் 30.09.2021 வரை 92 நாட்களுக்கு ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.391/. வீதம் கணக்கிட்டு ஊதியம் வழங்கிடும் பொருட்டு, சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் அனுமதி வேண்டியதில், துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 28.07.2021 நாளிட்ட குறிப்பில் "To be revised / reduced after 31st July 2021" என்ற மேற்குறிப்புடன் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.06.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின் படியும் மற்றும் ICMR வழிகாட்டுதலின்படியும் கொரோனா தடுப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஏதுவாக ஏற்கனவே தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 922 (Field Survey Worker) பணியாளர்களில் 60 சதவீதம் குறைத்து மண்டலம் – 7 ல் கோட்டம் 79 முதல் 93 வரை 369 எண்ணிக்கையிலான (Field Survey Worker) பணியாளர்களை மட்டும் உட்படுத்தி கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கொரோனோ தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலந்தாய்வுக்கூட்டத்தில், தற்போது கொரோனா தொற்று சற்று அதிகரிக்க தொடங்கியுள்ளதால், கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையினை மேலும் குறைத்திடும்பட்சத்தில், தடுப்பு நடவடிக்கையில் தொய்வு ஏற்பட்டுவிடும் என்பதால், சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண். 629/2021 நாள்.02.08.2021ன்படி தற்போது உள்ள 369 FSW பணியாளர்களை கொண்டு கொரோனா தடுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

எனவே மண்டலம்-7ல் வார்டு-79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல் , சளி , தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், கோவிட் தடுப்பூசி விவரங்கள் கணக்கெடுத்து தடுப்பூசி வழங்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய

விவரம் குறித்த கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்வதற்கு ஏதுவாக 01.08.2021 முதல் 30.09.2021 வரை 61 நாட்களுக்கு 369 (Field Survey Worker) பணியாளர்களை ஈடுப்படுத்தவும், அவ்வாறு ஈடுபடுத்தப்படும் 369 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ. 391/. வீதம் 369 பணியாளர்களுக்கு 61 நாட்களுக்கு ரூ. 8801019/. (369 நபர்கள் x ரூ. 391/- x 61 நாட்கள்= ரூ. 8801019/-) ஊதியமாக வழங்கிட அனுமதியும் வேண்டப்பட்டதில், துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 25.08.2021 நாளிட்ட ஆணையின்படி 01.08.2021 முதல் 31.08.2021 வரை மேற்படி கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது.

சுகாதாரத்துறையின் 28.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மண்டலம்-7ல் கோட்டம்-79 முதல் 93 வரைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு கொரோனா தொற்று கண்டறிய மாதிரி எடுத்தல் 2 நபர்களும், அவ்வாறு எடுக்கப்பட்ட விவரங்களை RTPCR செயலியில் பதிவேற்றம் செய்தல் பணியினை மேற்கொள்ள 1 நபரும், கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர்களை கண்டறிந்து, அவர் மூலமாக மற்றவர்களுக்கு கொரோனா தொற்று பரவுவதனை தடுக்கும்பொருட்டு பாதிக்கப்பட்ட நபரின் வீட்டிற்கு சென்று தேவையான பொருட்களை வாங்கி கொடுத்தல் மற்றும் தேவையான உதவி செய்தல் பணியினை மேற்கொள்ள 3 நபர்களும், கொரோனா தடுப்பு ஊசி செலுத்திடும் பணியினை மேற்கொள்ள 1 நபர் என்ற வீதத்தில் ஒரு கோட்டத்திற்கு 7 நபர் வீதம் 15 கோட்டங்களுக்கு 105 FSW பணியாளர்களை செப்டம்பர்-2021 ஒரு மாதத்திற்கு மட்டும் உட்படுத்தி கொரோனா தடுப்பு பணியினை மேற்கொள்ளலாம் எனவும், அவ்வாறு ஈடுப்படுத்தப்பட்டுள்ள FSW பணியாளர்களுக்கு, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவுப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதியத்தினை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-7ற்குட்பட்ட கோட்டம்-79 முதல் 93 வரைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு கொரோனா தொற்று கண்டறிய மாதிரி எடுத்தல், அவ்வாறு எடுக்கப்பட்ட விவரங்களை RTPCR செயலியில் பதிவேற்றம் செய்தல், கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர்களை கண்டறிந்து, அவர் மூலமாக மற்றவர்களுக்கு கொரோனா தொற்று பரவுவதனை தடுக்கும்பொருட்டு பாதிக்கப்பட்ட நபரின் வீட்டிற்கு சென்று தேவையான பொருட்களை வாங்கி கொடுத்தல் மற்றும் தேவையான உதவி செய்தல், கொரோனா தடுப்பு ஊசி செலுத்திடும் பணியினை மேற்கொள்ள 105 FSW பணியாளர்களை ஈடுப்படுத்தி செப்டம்பர்-2021 ஒரு மாதத்திற்கு மட்டும் கொரோனா தடுப்பு பணியினை மேற்கொள்ளவும், அவ்வாறு ஈடுப்படுத்தப்படும் FSW பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ. 391/. வீதம் 105 பணியாளர்களுக்கு (செப்டம்பர்-2021) 30 நாட்களுக்கு ரூ. 1231650/. (105 நபர்கள் x ரூ. 391/- x 30 நாட்கள்= ரூ. 1231650/-) ஊதியமாக வழங்கிடவும், அவ்வாறு வழங்கப்படும் ஊதியத்தினை கணக்கு குறியீட்டு எண். 20-21-07 கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 (Covid-2019 Man Power) என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திடவும் சிறப்பு அதிகாரி / மன்றம் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. கொரோனா நோய் தடுப்பு பணிக்காக மண்டலம்-7, கோட்டம்-79 முதல் 93 வரைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு கொரோனா தொற்று கண்டறிய மாதிரி எடுத்தல், விவரங்களை RTPCR செயலியில் பதிவேற்றம் செய்தல், கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர்களை கண்டறிந்து, அவர் மூலமாக மற்றவர்களுக்கு கொரோனா தொற்று பரவுவதனை தடுக்கும்பொருட்டு பாதிக்கப்பட்ட நபரின் வீட்டிற்கு சென்று தேவையான பொருட்களை வாங்கி கொடுத்தல் மற்றும் தேவையான உதவி செய்தல், கொரோனா தடுப்பு ஊசி செலுத்திடும் பணியினை மேற்கொள்ள 105 FSW பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தி செப்டம்பர்-2021 ஒரு மாதத்திற்கு மட்டும் கொரோனா தடுப்பு பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

<u>ம.அ.7.ந.க.எண். எச்2/1552/2021</u>

2. மேற்கண்ட 105 (Field Survey Worker) எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ. 391/. வீதம் 105 பணியாளர்களுக்கு 30 நாட்களுக்கு ரூ. 1231650/. (105 நபர்கள் x ரூ. 391/- x 30 நாட்கள்= ரூ. 1231650/-) ஊதியம் வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டியும்,

3. மேற்காணும் பணிக்கான செலவினத்தை கணக்கு குறியீட்டு எண். 20-21-07 கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 (Covid-2019 Man Power) என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியமாக வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/7139/2021**

**தீர்மான எண். 753/2021** **நாள்:29-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4 சுகாதாரத்துறை பூச்சி தடுப்புதுறை - கொசு ஒழிப்புபணிகளை மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கத்தின்(NULM) குழுக்கள் மூலம் 27.09.2018 முதல் தற்காலிகத் தொழிலாளர்களாக பணியமர்த்தப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக் காலம் 26.09.2021 உடன் முடிவடைவதால் மேலும் ஓர் ஆண்டு காலம் (27.09.2021 முதல் 26.09.2022வரை ) மலேரியா பணிகளை மேற்கொள்ள அனுமதி.**

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.793/2018, நாள்.20.09.2018 மற்றும் பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறையின் 24.09.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள கோட்டங்களில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நீர்தேக்க தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் உதிர்ந்த கொசுக்களை மருந்து தெளிக்கப்பட்டு அழிப்பதன் மூலம் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைக்கால் மற்றும் மூளை காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகைப்பரப்பும் பணிகளை மேற்கொள்ளவும், மேலும், நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை மற்றும் தேவையற்ற கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு 125 தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கத்தின் (NULM) குழுக்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.715/2020, நாள்:30.09.2020ல் மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கோட்டம்-34 முதுல் 48 வரையுள்ள மேற்கண்ட கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 142 தற்காலிக தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கத்தின் (NULM) குழுக்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ள 27.09.2020 முதல் 26.09.2021 வரை ஓராண்டு காலத்திற்கு மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 2021 – 2022ம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட தற்காலிக ஊதியத்தினை 01.04.2021 முதல் உயர்த்தி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்-4 அவர்களின் 14.09.2020 நாளிட்ட ஒப்புதலில், மேற்கண்ட 142 தற்காலிக மலேரியாப் பணியாளர்களின் (NULM) பணிக்காலம் 26.09.2021 வரை முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு (27.09.2021 முதல் 26.09.2022வரை) கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களுக்கும் மற்றும் சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களுக்கு குறிப்பு வைக்க மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

**ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/7139/2021**

**அட்டவணை**

| வ. எண் | பணியின் விவரம் | தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கதின் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட பண்யாளர்களின் எண்ணிக்கை | மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் (2021 - 2022 ம் ஆண்டுக்கானது) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கொசுப்புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி புகைப்பரப்பும் பணி மற்றும் நீர் வழித்தடப்பணி | 142 | ரூ.410/- | ரூ.410/- X 142 (பணியாளர்கள்) X 365 நாட்கள் =ரூ.2,12,50,300/- |

மண்டலம்-4, சுகாதாரத்துறை, கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 142 தற்காலிக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) குழுக்கள் மூலமாக 27.09.2021 முதல் 26.09.2022 வரை ஓராண்டு காலத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| அ) | மண்டலம்-4, சுகாதாரத்துறை, கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 142 தற்காலிக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) குழுக்கள் மூலமாக 27.09.2021 முதல் 26.09.2022 வரை ஓராண்டு காலத்திற்கு பணிபுரிய நிர்வாக அனுமதியும், |
| ஆ) | மாவட்ட ஆட்சியரின் விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு ரூ.410/-வீதம் 142 நபர்கள் X 365 நாட்கள் X ரூ.410 = ரூ.2,12,50,300/- ( ரூபாய் இரண்டு கோடியே பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து முந்நூறு மட்டும்) நிர்வாக அனுமதியும், |
| இ) | கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர்-4, அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |
| 'ஈ) | மேற்கண்ட பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பதிலாக புதிய நபர்களை பணியில் ஈடுபடுத்த துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதியும், |
| உ) | கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ளும் தற்காலிக மலேரியா (NULM) பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-4, அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு நாள் ஒன்றுக்கு ரூ.410/-வீதம் தினக்கூலி கணக்கிட்டு ஊதியம் வழங்க அனுமதியும், |

**ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/7139/2021**

| | |
|---|---|
| ஊ) | மேற்கண்ட தற்காலிக மலேரியா பணியாளர்களுக்கு (NULM) கோட்டம் வாரியாக 9 குழுக்கள் அமைத்து அக் குழுக்கள் மூலமாக ஊதியம் வழங்க அனுமதியும், |
| எ) | இப்பணிக்கான செலவீனத் தொகையை கணக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் ரூ.2.13 கோடியினை கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும். |

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**இ.பொ.து.ந.க.எண்.பி1/174/2021**

**தீர்மான எண். 754/2021** **நாள்:29-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - அச்சகம் - "கொரோனா வைரஸ்" தடுப்பு பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி அவ்வப்போது தேவைக்கேற்ப கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகள் செய்ய விலைப்புள்ளி கோரி, குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகள் நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

உலக சுகாதார நிறுவனம் "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைக்கான பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கைகளையும் மற்றும் பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியும் "கொரோனா வைரஸ்" பரவுவதை தடுக்கும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் "கொரோனா வைரஸ்" தொற்று பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுலிருந்து பாதுக்காத்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஸ்டிக்கர்கள், விளம்பர பதாகைகள், துண்டு பிரசுரங்கள் முதலியன அச்சடித்து விநியோகிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு பணியில் மேற்கொள்ளப்பட்டு வரப்படும் பலவகையான நடவடிக்கைகளுக்காக தேவையான பதிவேடுகள், படிவங்கள், அடையாள அட்டைகள், எழுதுபொருட்கள் ஆகியவைகள் அச்சகத்தின் மூலம் அச்சடித்தும் மற்றும் கொள்முதல் செய்தும் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இவற்றில் பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில் உள்ள இயந்திரங்கள் மூலம் அச்சடிக்க இயலாத ஸ்டிக்கர்கள், பதிவேடுகளின் மேலுறை, புத்தகங்கள் மற்றும் எண்கள் அச்சிடுதல், அடையாள அட்டைகள், முககவசங்கள், செல்ப் லாக் மருந்து உபயோக கவர்கள் கொள்முதல் மற்றும் அச்சிடுதல் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் அவ்வப்போது ஏற்பட்ட அவசரத்தின் அடிப்படையிலும் கீழ்கண்ட அச்சடித்தல் பணிகளை மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலை கோரிய நிறுவனத்திற்கு தகுந்த அலுவலரின் ஆணை பெற்று பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| Sl. No | File No. Work Order No & Date | Description | Qty | Rate | GST | Amount with Company Name | Justification |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | P1/156/2021 Dated. 19.05.2021 | Printing & Supply of Muticolour Sticker Pass 4 X 6 for Vegetable Vehicle | 52,000 nos | Rs.2.00 Per | Rs.0.36 (GST 18%) | Rs.1,22,720/- Nett N.V.P Enterprises | As per G.O.(D) No.83. Public (Election - II) Department Sl.No.3 - 11.5 x 8.5 - Rs.6.60 Exclusive of GST. The pass sticker are printed in 4 x 6 inches. (2 pieces in A4 size) Calculated as per G.O rate 11.5 x 8.5 (A4 size) 6.60/2 = 3.30. But GCC work rate is 2.36 inclusive of GST is less than Election Commission rates |
| 2 | P1/160/2021 Dated. 21.05.2021 | Printing and Supply of Muticolour Oxygen Cylinder Sticker 3 X 4 | 10,000 nos | Rs.0.97 Per | Rs.0.18 (GST 18%) | Rs.11,500/- Nett N.V.P Enterprises | As per G.O.(D) No.83. Public (Election - II) Department Sl.No.3 - 11.5 x 8.5 - Rs.6.60 Exclusive of GST. The pass Sticker are printed in (8 pieces in A4 size) Calculated as per G.O rate 11.5 x 8.5 (A4 size) 11.5 x 8.5 (A4 size) 6.60/4 = 1.65. But GCC work rate is 1.15 inclusive of GST is less than Election Commission rates |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | P1/162/2021 Dated. 22.05.2021 | Printing and Supply of Triage Book A4 Size Single Colour Wrapper with Printing & binding | 3,000 nos of books 100 lvs | Rs.70.00 Per | - | Rs.2,10,000/- Nett N.V.P. Enterprises | As per G.O.(D) No.83.Public (Election-II) Commission- rate fixed as S.No.6 - 11.5 x 8.5 = Rs.1.50 Exclusive of GST the Triage Book have 50 lvs in A4 size (11.5 x 8.5) Calculated 50 x 1.5 = 75 Exemption of GST. G.C.C printing press given the work order as Rs.70, the work order value is less than Election G.O rates. |
| 4 | P1/170/2021 Dated. 27.05.2021 | Printing and Supply of Multicolour Stickers A4 size for (Vegetable & Groceries) | 25,000 nos | Rs.5.09 Per | Rs.0.91 (GST 18%) | Rs1,50,000/- Nett N.V.P Enterprises | As per G.O.(D) No.83. Public (Election - II) Department Sl.No.3 - 11.5 x 8.5 - Rs.6.60 Exclusive of GST. This Sticker are printed in A4 size GCC work rate is Rs.6/- Exclusive of GST is less than Election Commission rates |
| 5 | P1/172/2021 Dated. 27.05.2021 | Printing and Supply of Muticolour Oxygen Cylinder Sticker in the size of 1.5 X 1 | 16,000 Nos | Rs.0.50 Per | Rs.0.09 (GST 18%) | Rs.9,440/- Nett N.V.P Enterprises | As per G.O.(D) No.83. Public (Election - II) Department Sl.No.3 - 11.5 x 8.5 - Rs.6.60 Exclusive of GST. The pass Sticker are printed in 10 x 40 mm (2 pieces in A4 size) Calculated as per G.O rate 11.5 x 8.5 (A4 size) 6.60/8 = 0.85. But GCC work rate is 0.59 inclusive of GST is less than Election Commission rates |
| 6 | P1/173/2021 Dated 29.05.2021 | Printing & Supply of Muticolour Sticker Pass 4 X 6 for Vegetable Vehicle | 38,000 Nos | Rs.2.00 Per | Rs.0.36 (GST 18%) | Rs.89,680/- Nett N.V.P Enterprises | As per G.O.(D) No.83. Public (Election - II) Department Sl.No.3 - 11.5 x 8.5 - Rs.6.60 Exclusive of GST. The pass Sticker are printed in 5 x 5 intches. (2 pieces in A4 size) Calculated as per G.O rate 11.5 x 8.5 (A4 size) 6.60/2 = 3.30. But GCC work rate is 2.36 inclusive of GST is less than Election Commission rates |
| 7 | P1/149/2021 Dated. 15.05.2021 | Purchase of Yellow Colour Maplitho paper | 54 reams | Rs.2205 Per | Rs.264.60 (GST 12%) | Rs.1,33,358/- Nett Dawood Paper Mart | GCC Printing Press Required paper are purchased through TNPL . TNPL is supplied only white paper only. Hence colour maplitho are purchased through outsource paper supplier in Competitive rates. |
| 8 | P1/150/2021 Dated. 15.05.2021 | Purchase of Green Colour Maplitho paper | 19 reams | Rs.2205 Per | Rs.264.60 (GST 12%) | Rs.46,922/- Nett Orr Pee Enterprises | GCC Printing Press Required paper are purchased through TNPL . TNPL is supplied only white paper only. Hence colour maplitho are purchased through outsource paper supplier in Competitive rates. |
| 9 | P1/154/2021 Dated. 19.05.2021 | Purchase of Pink Colour Maplitho paper | 51 reams | Rs.2205 Per | Rs.264.60 (GST 12%) | Rs.1,25,950/- Nett N.V.P Enterprises | GCC Printing Press Required paper are purchased through TNPL . TNPL is supplied only white paper only. Hence colour maplitho are purchased through outsource paper supplier in Competitive rates. |
| 10 | P1/157/2021 Dated. 19.05.2021 | COVID 19 Special Duty Card with Rope & Pouch for the use of Fever Survey Worker ID Card 12000 nos and Focus Volunteer 2000 nos | 14,000 nos | Rs.19.64 Per | Rs.2.36 (GST 12%) | Rs.3,08,000/- Nett N.V.P Enterprises | The Pouch and Rope is Stationery items, the stock are not maintained at GCC Press. Required Quantity are purchased through outsource is Competitive rates. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | P1/158/2021 Dated. 19.05.2021 | Supply of Self Lock Plastic Cover in the size of 10"X14" for the use of Corona Testing | 100000 nos | Rs.5.50 Per | Rs.0.99 (GST 18%) | Rs.6,49,000/- Nett Alex Trading Company | The Self Lock Plastic Cover is Stationery items, the stock are not maintained at GCC Press. Required Quantity are purchased through outsource is Competitive rates. |
| 12 | P1/159/2021 Dated. 21.05.2021 | Supply of Flex Roll Vinyl Sticker 5feet | 50 roll | Rs.10,084.75 Per | Rs.1815.25 (GST 18%) | Rs.5,95,000/- Nett Alex Trading Company | The Flex Roll 5 feet is Stationery items, the stock are not maintained at GCC Press. Required Quantity are purchased through outsource is Corporation rates. |
| 13 | P1/163/2021 Dated. 24.05.2021 | Cloth Line Cover 8X12 inch for the use of CoronaPatient Kit | 100000 nos | Rs.5.50 Per | Rs.0.99 (GST 18%) | Rs.6,49,000/- Nett A.K. Enterprises | The Cloth Line Cover is Stationery items, the stock are not maintained at GCC Press. Required Quantity are purchased through outsource is Competitive rates. |
| 14 | P1/146/2021 Dated. 10.05.2021 | Printing and Supply of Multicolour Stickers – 35 square feet (Ambulance) | 250 Vehicles | Rs.1900 Per | Rs.342.00 (GST 18%) | Rs.5,60,500/- Nett Sree Nithiyananda Printers | As Per G.O Multicolour Sticker Printing rates are not mentioned. Hence, Competitive market rates are given. |
| 15 | P1/153/2021 Dated. 17.05.2021 | Printing and Supply of Multicolour Stickers -– 25 square feet (Omni ) | 20 Vehicles | Rs.1900 Per | Rs.342.00 (GST 18%) | Rs.44,840/- Nett Sree Nithiyananda Printers | As Per G.O Multicolour Sticker Printing rates are not mentioned. Hence, Competitive market rates are given |
| | | Printing and Supply of Multicolour Stickers COVID Zonal Enforcement Team Vehicle – 35 square feet - (Zet) | 30 Vehicles | Rs.1900 Per | Rs.342.00 (GST 18%) | Rs.67,260/- Nett Sree Nithiyananda Printers | As Per G.O Flex Banner Printing rates are not mentioned. Hence, Competitive market rates are given |
| 16 | P1/152/2021 Dated. 17.05.2021 | Printing and Supply of Muticolour Flex Banner (3 x 2) Hotspot Banner | 2,000 banners | Rs.76.27 Per | Rs.13.73 (GST 18%) | Rs.180000/- Nett A.K Enterprises | As Per G.O Flex Banner Printing rates are not mentioned. Hence, Competitive market rates are given |
| **Total Amount** | | | | Rs.22587.22 | Rs.3655.02 | **Rs.39,53,170 Nett** | |

"கொரோனா வைரஸ்" தடுப்பு பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட அச்சடித்தல் மற்றும் கொள்முதல் செய்து வழங்கும் பணிகளின் மொத்த செலவீனத் தொகை ரூ.39,53,170/- என ஆகும்.

இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குறியீடு எண். 230-70-12-06 என்ற தலைப்பின்கீழ் செலவீனம் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் "கொரோனா வைரஸ்" தடுப்பு பணிக்கு தேவைப்படும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஸ்டிக்கர்கள், பதிவேடுகளின் மேலுறை, புத்தகங்கள் அச்சடித்தல் மற்றும் செல்ப் லாக் மருந்து உபயோக கவர்கள் கொள்முதல் ஆகியவற்றை தேவைக்கேற்ப அவ்வப்போது தகுந்த அலுவலரின் ஆணை பெற்று மொத்தம் ரூ.39,53,170/- செலவினத்தில் கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கியதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. "கொரோனா வைரஸ்" தடுப்பு பணிக்கு தேவையான கொள்முதல் மற்றும் அச்சடித்தல் பணிகளுக்கு மேற்கண்ட அட்டவணையின்படி நிறுவனங்களுக்கு பணி ஆணைகள் வழங்கி பணிகளை மேற்கொண்டதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்,

3. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல் - 16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால், தகுதிவாய்ந்த நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கண்ட பணியை மேற்கொண்டதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்,

4. பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒப்பம் கோருவதற்கும், பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

5. மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறையின் கணக்கு குறியீடு எண். 230-70-12-06ல் ரூ.39,53,170/- செலவீனம் மேற்கொள்வதற்கு நிதி நிர்வாகம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**பொ.து.ந.க.எண்.ஈ2/25521/2021 &**
**ம.அ.9.சு.து.ந.க.எண்.எச்1/0832/2021**

**தீர்மானஎண்.755/2021** **நாள்:29-09-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – டாக்டர். B.A.அபிலாஷ், மண்டல நல அலுவலர் மண்டலம்-9 (மாற்றுப்பணி மண்டலம்-11) அவர்கள் மருத்துவ சிகிச்சைக்கான செலவிடப்பட்ட தொகை ரூ.8,04,026/-ஐ தீர்வு செய்து வழங்க நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

ஆணையர் அவர்களின் 06.10.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர். B. A.அபிலாஷ் அவர்களை அயற்பணி மூலம் மண்டல நல அலுவலர், மண்டலம் – 11 ல் பணியமர்த்தப்பட்டு, (ஊதியம் பெறும் இடம் மண்டலம் – 9) 21.09.2020 அன்று முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேலும், ஆணையர் அவர்களின் 22.01.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 21.01.2021 முதல் 23.01.2021 வரை புதுடில்லியில் நடைபெற்ற (NPCC Meeting Finalisation of PIP cancelled and re-scheduled – Participation Officer) கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக கலந்து கொண்டார்.

டாக்டர். B. A.அபிலாஷ், மண்டல நல அலுவலர், மண்டலம்-9, (மாற்றுபணி மண்டலம் – 11) அவர்கள் தனது 08.04.2021 நாளிட்ட கடிதத்தில், புதுடில்லிக்கு சென்ற போது தனக்கு 23.01.2021 அன்று உயர் இரத்த அழுத்ததின் காரணமாக பக்கவாதம் ஏற்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனவும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து சிகிச்சை முடியும் வரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் அறிக்கை மற்றும் பட்டிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் தன்னுடைய மருத்துவ சிகிச்சை தொகையான ரூ. 8,04,026/--ஐ பெற்றுத் தருமாறு தெரிவித்துள்ளார்.

முதன்மைச் செயலர்/ ஆணையர் அவர்களின் 19.08.2021 நாளிட்ட குறிப்பில், தனியருக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான தொகை ரூ.8,04,026/--ஐ சிறப்பு இனமாக கருதி பெருநகர சென்னை மாநகராட்சி தீர்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, அயற்பணி மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்ட டாக்டர். B. A. அபிலாஷ், மண்டல நல அலுவலர், மண்டலம் – 9 (மாற்றுபணி மண்டலம்-11) அவர்களின் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான தொகை ரூ.8,04,026/--ஐ கணக்கு குறியீட்டு எண்.30-35-01 கணக்கு தலைப்பு எண். 271-900-400ல் நிதி ஒதுக்கீடு செய்து பெருநகர சென்னை மாநகராட்சியில் தீர்வு செய்வதற்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 27.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான தொகையை நிதி ஒதுக்கீடு செய்து தீர்வு செய்வதற்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2671/1994**

**தீர்மானஎண்.756/2021** **நாள்:29-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-10, மயிலாப்பூர் கிராமம், புல எண். 2697/5 பாகம் - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 2093 சதுர அடி நிலம் - செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது - குத்தகை காலம் முடிவுற்றது - 01.04.2021 முதல் மூன்று வருட காலத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மயிலாப்பூர் கிராமம், புல எண். 2697/5 பாகம், சுந்தரேஸ்வர் தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 2093 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தை செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். RDC.No.G3/12098/80 நாள்.14.03.1980-ன் படி மாதம் ரூ.170/- வீதம் ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது.

மேற்படி செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிலத்தின் விவரம் | பரப்பளவு | குத்தகை காலம் | வாடகை | அரசாணை / மன்றத்தீர்மான எண். |
|---|---|---|---|---|---|
| 1 | மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம் | 2093 ச.அடி நிலம் | 1980-1981 ஒரு வருடம் | மாதாந்திர வாடகை ரூ.170/- | சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைஎண். நாள். 14.03.1980 |
| 2 | மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம் | 2093 ச.அடி நிலம் | 22.08.1990 முதல் 21.08.1992 வரை | மாதாந்திர வாடகை ரூ.1,512/- | சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.1471/1990, நாள். 16.10.1990 |
| 3 | மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம் | 2093 ச.அடி நிலம் | 22.08.1992 முதல் 20.08.1995 வரை | வருட வாடகை ரூ.20,000/- | சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.148/1995, நாள். 03.01.1995 |
| 4 | மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம் | 2093 ச.அடி நிலம் | 21.08.1995 முதல் 20.08.1998 வரை 3 ஆண்டுகள் | வருட வாடகை ரூ.20,000/- | சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.1694/1996, நாள். 05.08.1996 |
| 5 | மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம் | 2093 ச.அடி நிலம் | 21.08.1998 முதல் 31.03.2018 வரை வரன்முறை செய்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை 3 ஆண்டுகள் | மாதாந்திர வாடகை ரூ. 24,540 | சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.407/2019, நாள். 25.07.2019. |

இக்கல்வி நிறுவனத்திற்கு குத்தகை காலம் 20.08.1998 அன்றோடு முடிவுற்ற பின்னரும் இக்கல்வி நிறுவனம் மேற்படி இடத்தினை பயன்படுத்தி வருகிறது.

சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.671/2018, நாள்.20.08.2018-ல் இக்கல்வி நிறுவனம் நியாயமான கல்வி கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளி மற்றும் பள்ளியின் மொத்த மாணவர்களில் 50%-ற்கு கீழ் அரசு உதவி பெறும் மாணவர்களை கொண்ட பள்ளியின் வகைபாட்டின் கீழ் வருவதால் இக்கல்வி நிறுவனத்திற்கு வழிகாட்டி மதிப்பில் இருந்து 1.5% சதவீதத்தில் குத்தகை தொகையினை நிர்ணயம் செய்வதற்கு மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2671/1994**

அரசாணை எண்.389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.09.2019-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியால் குத்தகைக்கு வழங்கப்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே வகையான குத்தகை தொகையை நிர்ணயம் செய்யும் பொருட்டு அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புஅதிகாரி, மன்றத்தீர்மான எண்.407/2019 நாள்.25.07.2019ன்படி மேற்படி நிலத்திற்கான 21.08.1998 முதல் 31.03.2018 வரையிலான காலத்திற்கு குத்தகை வரன்முறை செய்தும் மற்றும் 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்று வருடங்களுக்கு குத்தகை அளிக்கப்பட்டுள்ளது. குத்தகைக்கான முழுதொகையும் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

செல்லம்மாள் கல்வி நிறுவனத்தின் 30.07.2021 மற்றும் 18.08.2021 நாளிட்ட கடிதத்தில் இக்கல்வி நிறுவனம் நியாயமான கல்வி கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளி மற்றும் பள்ளியின் மொத்த மாணவர்களில் 50% -ற்கு கீழ் அரசு உதவி பெறும் மாணவர்களை கொண்ட பள்ளியின் வகைபாட்டின் கீழ் வருவதால் வழிகாட்டி மதிப்பில் 1.5% சதவீதமாக குத்தகை தொகையினை நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், மயிலாப்பூர் கிராமம், சுந்தரேஸ்வர் தெருவிற்கான வழிகாட்டி மதிப்பு ரூ.4,690/- (ஒரு சதுர அடிக்கு) ஆகும். அதனடிப்படையில் அரசாணை எண்.389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.09.2019-ன்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15%ஆக உயர்த்தி 01.04.2021 முதல் 31.03.2024 வரை செலுத்த வேண்டிய குத்தகை தொகை பின்வருமாறு கணக்கீடு செய்யப்படுகிறது.

| காலம் | மாத குத்தகை தொகை ரூ. | குத்தகை தொகை ரூ. | சரக்கு மற்றும் சேவை வரி / GST ரூ. | செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01.04.2021 முதல் 31.03.2024 வரை (குத்தகை காலம்) (36 மாதங்கள்) | 12270 (2093 x 4690 x 1.5%/12) =12270x15% ரூ.14,111./- | 507996 (14111 p.m x36) | 91439 (507996x 18%) | 5,99,435/- |

மேலும், 01.04.2018 முதல் 31.03.2021 வரையிலான குத்தகை தொகை ரூ.10,42,459/- ஐ 27.07.2021 அன்று சென்னை மாநகராட்சி கரூவூலத்தில் செலுத்தப்பட்டதால் 01.04.2021 முதல் 31.03.2024 வரையிலான காலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானங்களின்படி தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு மட்டுமே குத்தகை நீட்டிப்பு செய்ய இயலும் என்பதால் செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு 01.04.2021 முதல் மூன்று வருட காலத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 26.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு 01.04.2021 முதல் மூன்று வருட காலத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு , சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**El.D.C.NO. C.SMII/P1 /2091 / 2021**

**Resolution No.757/2021 Date:30-09-2021**

**Greater Chennai Corporation – Electrical Department- E-Tender – Supply, Erection, Testing and Commissioning of 1250 KVA Transformer and availing of H.T Supply for 14000 cum BIO CNG Gas Plants (2 Units) at Chinnasekadu in Div 29, Zone III Madhavaram for SWM department- Tender Opened on 13.08.2021 – Lowest and reduced rates - Recommendation for acceptance – For orders.**

In Greater Chennai Corporation, the process of converting biodegradable waste to bio-gas and refined and enriched to get purified CNG fuel is taken up by Soild Waste Management Department by erecting BIO CNG Gas Plants(2 Units) at Div 29 Chinnasekadu, Zone 3 Madhavaram.

Work Order has been issued to M/s.Maha Sakthi Bio Enercon Private Limited. For erection of BIO CNG Gas Plants (2 Units), For the operation of BIO CNG Gas Plant, Submersible Agitators for Digestor, Feeding, Fertilizer tank, Pre-treatment Tank, Shredder & Grinder, Conveyor System, Screw Feeder, Raw material feeding Pump, HF Agitator for Digester, Pump for Slurry Transfer, Gas Purification System, High Pressure Biogas Compressor and Solid Liquid Separator. The total connected load of these machineries totals 501.50 KWh. This requires 3 phase HT Line with separate feeder power supply is to be obtained from TANGEDCO. This requisites the installation of 1250 KVA Transformer with necessary accessories to avail HT line with separate feeder supply.

The details of the work are as follows.

| Sl. No. | Name of Location | Power consumption details | Actuators Required | Electrical Installations Required |
|---|---|---|---|---|
| 1 | Madhavaram Chinnasekkadu Zone-3 (Bio Gas Plant) | Phase-1 = 501.50KW Phase-2 = 501.50KW | Submersible Agitators for Digester,Feeding, Fertilizer tank, Pre-treatment Tank, Shredder & Grinder, Conveyor System, Screw Feeder, Raw material feeding Pump, HF Agitator for Digester, Pump for Slurry Transfer, Gas Purification System, High Pressure Biogas Compressor and Solid Liquid Separator | 1250KVA Transformer with ACB Panel |

Special Officer, Council Resolution No. 536 /2021 dated:03.07.2021 has been obtained for Supply, Erection, Testing and Commissioning of 1250 KVA Transformer and availing of H.T Supply for 14000 cum BIO CNG Gas Plants (2 Units) at Chinnasekadu in Div 29, Zone III Madhavaram for SWM department.

Tender (Two Cover System) for the above work was called with due date of opening dated 13.08.2021.The e-tender was published on 29.07.2021 in the Deccan Chronicle(English), The Hindu (Tamil) and Corporation Bulletin.

The tender was opened on 13.08.2021 in the presence of bidders. Five bidders participated in the tender namely 1.M/s Grenel Powers Pvt Ltd 2. M/s. MV Power Consultants and Engineers Pvt Ltd, 3.M/s Murugan Electrical Traders 4. M/s.Orient Poles & 5. M/s. Sabari and Leon Electricals Pvt Ltd. The technically qualified bidders 1. M/s Murugan Electrical Traders & 2. M/s.Orient Poles.

The financial bid of the technically qualified bidders was opened on 13.09.2021. The details of lowest quoted tenderers are as follows.

# El.D.C.NO. C.SMII/P1 /2091 / 2021

**Details of Rates Quoted:**

| File No | Name of the Work | Tender Value (Incl GST @ 12%) | Technically Qualified Tenderers | Lowest Quoted Tenderer | Lowest Quoted Amount (Incl GST @ 12%) | Percentage between Tender Value (Incl GST @ 12%) and Lowest Quoted Amount (Incl GST @ 12%) |
|---|---|---|---|---|---|---|
| E.L.D.C. No. SMII /P1 /2091 /2021 | Supply, Erection, Testing and Commissioning of 1250 KVA Transformer and availing of H.T Supply for 14000 cum BIO CNG Gas Plants (2 Units) at Chinnasekadu in Div 29, Zone III Madhavaram for SWM department | Rs.77,72,912/- | 1.M/s.Murugan Electrical Traders<br><br>2.M/s.Orient Poles | 1.M/s.Murugan Electrical Traders | Rs.77,24,719.95 | (-)0.62% |

The quoted amount was (-)0.62% lesser than the Work value. Rate Negotiation was obtained from L1 Bidder M/s.Murugan Electrical Traders via department letter dated 13.09.2021.

**1)Details of Rates after First Negotiation:**

| File No | Name of the Work | Tender Value (Incl GST @ 12%) | Lowest Quoted Tenderer | Negotiated Amount(Incl GST @ 12%) | Percentage between Tender Value (Incl GST@ 12%) and Lowest Quoted Amount (Incl GST @ 12%) |
|---|---|---|---|---|---|
| E.L.D.C. No. SMII /P1 /2091 /2021 | Supply, Erection, Testing and Commissioning of 1250 KVA Transformer and availing of H.T Supply for 14000 cum BIO CNG Gas Plants (2 Units) at Chinnasekadu in Div 29, Zone III Madhavaram for SWM department | Rs.77,72,912/- | 1.M/s.Murugan Electrical Traders | Rs.77,24,253.57 | (-)0.626% |

The negotiated amount of L1 Bidder M/s.Murugan Electrical Traders was (-)0.626% lesser than the Work value. In response to the department letter dated 14.09.2021, further rate reduction was obtained from L1 Bidder M/s.Murugan Electrical Traders dated 15.09.2021.

The L1 bidder have not reduced the rates and have stated the following reasons " We are not in a position to reduce further due to increase of raw materials prices of copper has gone up by 40 %, SMC insulation by 305, MS by 30%, Copper winding & Cable by 30%, PVC, ACb by 20%, RMU & VCB by 30%, Cement, MSand, blue metal by 30%, transport by 25%, and Labour by 30% in last 3 months" via letter dated 15.09.2021.

Hence, considering the above reasons and the negotiated rate is (-)0.626% lesser than the work value, the lower reduced offer of M/s.Murugan Electrical Traders for Supply, Erection, Testing and Commissioning of 1250 KVA Transformer and availing of H.T Supply for 14000 cum BIO CNG Gas Plants (2 Units) may be recommended for acceptance.

**El.D.C.NO. C.SMII/P1 /2091 / 2021**

The subject was place in the Tender Scrutinizing Committee held on 20.09.2021 and the lowest and reduced offer of M/s.Murugan Electrical Traders is recommended for acceptance of Special officer(Council).

Hence,

1. To accept the lower and reduced offer of M/s.Murugan Electrical Traders for Supply, Erection, Testing and Commissioning of 1250 KVA Transformer and availing of H.T Supply for 14000 cum BIO CNG Gas Plants (2 Units) at Chinnasekadu in Div 29, Zone III Madhavaram for SWM department for a total amount of **Rs.77,24,253.57** (Inclusive of GST @12%) which is (-)0.626% lesser than the work value of Rs.77,72,912/- (Inclusive of GST @12%) and to award the work order to M/s.Murugan Electrical Traders.

2. To meet the expenditure under the account code F.C No.20-24-02 & DP No.412-401-305 of the Electrical department for the year 2021-22.

Sl.No.1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.28.09.2021 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*** * * * * ***

**பொ.து.ந.க.எண்.இ7/26373/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/1142/2021**

**தீர்மானஎண்.758/2021** **நாள்:30-09-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை திருமதி. A. குசலகுமாரி, தாய்சேய்நல அலுவலர், மாதவரம் மருத்துவ மண்டல அலுவலம் -3 (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டல அலுவலம் -6) அவர்கள் 04.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, மாதவரம் மருத்துவ மண்டல அலுவலகத்தில் தாய்சேய்நல அலுவலராக பணிபுரியும் திருமதி. A. குசலகுமாரி அவர்கள் தனது 32 வருடங்கள் எவ்வித ஒழுங்கு நடவடிக்கை இல்லாமல் பணிபுரிந்து உள்ளதாகவும் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் தன் விருப்ப ஓய்வு வேண்டி 07.07.2021 நாளிட்ட மனுவினை சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களுக்கு அளித்துள்ளார்.

திருமதி. A. குசலகுமாரி அவர்கள் 09.01.1989 அன்று தாய்சேய் நல அலுவலராக காஞ்சிபுரம் நகராட்சியில் பணியில் சேர்ந்து தொடர்ந்து மாதவரம் மருத்துவ மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார் (ஊதியம் திரு.வி.க மண்டலம்). தனியருக்கு தாய் சேய் நல அலுவலர் பதவியில் 09.01.1989 பணிவரன் முறைப்படுத்தியும், 24.01.1991 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தெலுங்கு ஆகும். தனியர் 10 ஆம் வகுப்பில் தமிழில் தேர்ச்சி பெற்றுள்ளார்

காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் அவர்களின் 09.09.2021 நாளிட்ட கடிதத்தில், காஞ்சிபுரம் நகராட்சியில் பணிபுரிந்த காலமான 09.01.1989 முதல் 14.07.1994 வரை தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை, குற்றவியல் நடவடிக்கை, முன்பணம், தணிக்கைத் தடை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மண்டல மருத்துவ அலுவலர், மருத்துவ மண்டலம்-6, 1, 3 அவர்களின் 29.07.2021, 12.09.2021, 07.09.2021 நாளிட்ட கடிதத்தில் தனியர் பணிபுரிந்த காலங்களில் தனியர் மீது முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர்-2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 17.08.2021 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 11.08.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் 09.01.1989 முதல் இந்நாள் வரை பணிபுரிந்த காலத்திற்கு உள்ளாட்சி தணிக்கை அறிக்கையின்படி, தனியர் மீது தணிக்கை தடை இல்லை எனவும், பின்னர் தெரியவரின் தனியரே பொறுப்பாவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020-2021 மற்றும் 2021-2022 தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை. தனியர் தொடர்பான தணிக்கைத் தடைகள் இருப்பது தெரிய வரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனைக்குட்பட்டு சான்று அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 25.08.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 18.08.2021 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 06.09.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றும், நிலுவை தொகை இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 57 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 32 ஆண்டுகள் 08 மாதங்கள் 17 நாள் ஆகும். தனியர் சம்பளமில்லா விடுப்பு 10 நாள் துய்த்துள்ளார். தனியர் அரசு விதிகளின்படி வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.12.2023 ஆகும்.

**பொ.து.ந.க.எண்.இ7/26373/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/1142/2021**

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 32 ஆண்டுகள் 08 மாதங்கள் 17 நாள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை 04.10.2021 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி.A. குசலகுமாரி, தாய்சேய் நல அலுவலர், மாதவரம் மருத்துவ மண்டலம் (ஊதியம் திரு.வி.க நகர் மருத்துவ மண்டலம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, 2020 – 21 மற்றும் 2021 – 22 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளிவந்தவுடன் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதியபணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 04.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.து.ந.க.எண்.இ7/26038/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/1149/2021**

**தீர்மானஎண்.759/2021** **நாள்:30-09-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – மருத்துவ சேவைகள் துறை திருமதி. எம்.சின்றல்லா, நகர சுகாதார செவிலியர், முகலிவாக்கம் நகர ஆரம்ப சுகாதார நிலையம் ஆலந்தூர் மருத்துவ மண்டலம் (ஊதியம் கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்) அவர்கள் 06.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, ஆலந்தூர் மருத்துவ மண்டலம்- 12ன் கீழ் இயங்கும் முகலிவாக்கம் நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் நகர சுகாதார செவிலியராக பணிபுரியும் (ஊதியம் கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்) திருமதி. எம்.சின்றல்லா அவர்கள் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலும், குடும்பச்சூழ்நிலை காரணத்தாலும் பணிக்கு வர இயலாத நிலையில் உள்ளதால் தன் விருப்ப ஓய்வு வேண்டி 0907.2021 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்

திருமதி. எம்.சின்றல்லா அவர்கள் 13.06.1991 அன்று நகர சுகாதார செவிலியராக பணியில் சேர்ந்து பணிப்புரிந்து வருகிறார். இவருக்கு நகர சுகாதார செவிலியர் பதவியில் 13.06.1991 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 16.07.1993 அன்று தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர்கள், மண்டலம்-5,8,12 அவர்களின் முறையே 06.08.2021, 07.09.2021 மற்றும் 17.08.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் பணிபுரிந்த காலங்களில் தனியர் மீது முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர் -2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 17.08.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 25.08.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 11.08.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் இந்நாள் வரை பணிப்புரிந்த காலத்தில் உள்ளாட்சி தணிக்கைத்துறை ஆவணங்களின்படி, தணிக்கைப்பத்திகள் நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவித்து, மேலும் மருத்துவ சேவைகள் துறை 2020 – 2021 மற்றும் 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனையுடன் தனியருக்கு சான்று அளிக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 09.08.2021 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்க 07.09.2021 நாளிட்ட கடிதத்தில், தற்பொழுது நிலுவை தொகை அசலும், வட்டியுமாக ரூ9,85,244/. நிலுவை உள்ளது இத்தொகையை (DCRG) பணிகால ஓய்வு பணிநிதியிலிருந்து பிடித்தம் செய்து சங்கத்திற்கு காசோலையாகவோ அல்லது RTGS மூலமாகவோ அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.தற்போது தன்யருக்கு சேர வேண்டிய பணிக்கால ஓய்வு கொடை தொகை தோராயமாக கணக்கிடப்பட்டதில், ரூ.11,09,804/- பெறுவதற்கு தகுதியானவராக உள்ளார்.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 56 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 30 ஆண்டுகள் 03 மாதங்கள் 24 நாட்கள் ஆகும். தனியர் சம்பளமில்லா விடுப்பு துய்க்கவில்லை, தனியர் அரசு விதிகளின்படி வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 30.06.2025 ஆகும்.

**பொ.து.ந.க.எண்.இ7/26038/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/1149/2021**

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்:07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்:11.12.1995ன்படியும், தனியர் 30 ஆண்டுகள் 03 மாதங்கள் 24 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. எம்.சின்றல்லா, நகர சுகாதார செவிலியர், முகலிவாக்கம் நகர ஆரம்ப சுகாதார நிலையம் ஆலந்தூர் மருத்துவ மண்டலம்-12 (ஊதியம் கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்-10 ) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.9,85,244/- (ஒன்பது லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து இருநூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) கடன் தொகையை தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யவும், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, உள்ளாட்சி நிதி தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை, 06.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ4/16484/2021**

**தீர்மானஎண்.760/2021** **நாள்:30-09-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 01.07.2021ஐ மைய நாளாக கொண்ட 2021 - 2022ஆம் ஆண்டிற்கான உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்குண்டான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

சிறப்பு அதிகாரி – மன்றத்தீர்மான எண்.068/2019, நாள்.15.02.2019ல், பெருநகர சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் - 2009ன்படி பின்பற்றப்பட்ட பொறியியல் பணிவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு, அரசுக்கு முன்மொழிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கான பணிவிதிகளின் விவரம் கீழ்வருமாறு;

| Name of the Post | Method of Recruitment | Qualification |
|---|---|---|
| **Assistant Engineer (Electrical)**<br><br>**Scale of Pay**<br><br>**Rs.37700-119500 (Level -20)**<br><br>Crucial date 1st July of every year. | 1. By direct recruitment<br>2. By transfer from Junior Engineer (Electrical) on acquiring the qualification prescribed for direct recruitment.<br>3. **By promotion of approved probationers from Supervisor (Electrical) and Skilled Assistant Grade –I & II having total service of not less than 5 years on acquiring the qualification prescribed for direct recruitment.**<br>(For promotion to the post of Assistant Executive Engineer, seniority shall be fixed in the cadre of Assistant Engineer or Junior Engineer whichever is beneficial to the individual) | A degree in Electrical and Electronics Engineering or Electronics and Communication Engineering or Instrumentation Engineering or Computer Science or Information Technology Engineering of any University or Institution recognized by the University Grants commission for purpose of its grant (or) any other qualification recognized as equivalent thereto by Government of Tamil Nadu.<br><br>Should have passed the Account Test for Public Works Department Officers and Subordinates (Part-1&II) within a period of two years. |

தற்போதுள்ள உதவி / இளநிலை பொறியாளர் (மின்சாரம்) பதவியில் உள்ள காலிப்பணியிடங்களின் விவரம் கீழ்வருமாறு;

| | |
|---|---|
| 1. பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | **உதவி பொறியாளர் (மின்சாரம்)** |
| 2 மைய நாள் | ***01.07.2021*** |
| 3 ஊதிய விகிதம் | ***As per VIIth Pay Commission***<br>***Rs.37700-119500 Level - 20*** |
| 4 கல்வித்தகுதி | *A degree in Electrical and Electronics Engineering or Electronics and Communication Engineering or Instrumentation Engineering or Computer Science or Information Technology Engineering of any University or Institution recognized by the University Grants commission for purpose of its grant (or) any other qualification recognized as equivalent thereto by Government of Tamil Nadu.*<br>*(Should have passed the Account Test for Public Works Department Officers and Subordinate (Part-1&II) within a period of two years.)* |

**பொ.து.ந.க.எண்.ஈ4/16484/2021**

| | |
|---|---|
| 5 காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் - 118<br>(அ) தற்காலிக பணியிடம் - ---<br>(ஆ) நிரந்தர பணியிடம் - 118<br>(இ) தற்போது பணிபுரிபவர்கள் - 106<br>2) பட்டியலாண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்பட்டுள்ள / ஏற்படும் காலிப்பணியிடம் - 0<br>3) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் - 12<br>4) பட்டியலாண்டில் பதவி உயர்வினால் ஏற்பட்டுள்ள / ஏற்படும் காலிப்பணியிடம் - 0<br>5) பட்டியலாண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் - 0<br>6) எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் 30% (அரசாணை (ப) எண்.103, நாள்.09.10.2014-ன்படி 12x30/100) - 4<br>------<br>**மொத்த காலிப்பணியிடம் 16** |

01.07.2020ஐ மைய நாளாக கொண்ட 2020-2021ஆம் பட்டியலாண்டில் உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்கள் எவரும் இல்லாததால், உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவிக்குண்டான தெரிவுப்பட்டியலை, 11.07.2021 நாளிட்ட "இன்மைப்பட்டியல்"-ஆக வெளியிடப்பட்டது.

பொதுத்துறையின் 11.07.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, 01.07.2021ஐ மைய நாளாக கொண்டு 2021 - 2022ஆம் ஆண்டின் உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு, பொறியியல் சார்நிலை பணிகளுக்கான விதிகளில் நியமிக்கப்பட்டுள்ள, தகுதிகாண்பருவம் நிறைவடைந்து, 5 ஆண்டுகள் பணிமுடித்த மின் மேற்பார்வையாளர் (Supervisor-Electrical) மற்றும் பயிற்சி திறனுள்ள உதவியாளர், நிலை 1 மற்றும் 2 (Skilled Assistant Grade I and II) பதவி வகிக்கும் தகுதி வாய்ந்த நபர்களின் பணிவிவரங்கள் கோரப்பட்டதில், பணித்துறை, சிறப்பு திட்டங்கள் துறை, அரங்கத்துறை, மன்றத்துறை, இயந்திர பொறியியல் துறை, தலைமை பொறியாளர் (சாலைகள் / பாலங்கள்) அலுவலகம், மழைநீர்வடிகால் துறை, தலைமை பொறியாளர் (பொது) அலுவலகம், பொதுசுகாதாரத் துறை, மின்துறை, பூங்காத்துறை, கட்டடத்துறை, பேருந்து சாலைகள் துறை, நிலம் மற்றும் உடைமைத்துறை, மண்டலம் -1, 2, 3, 4, 5, 6, 7, 9, 11, 12, 13, 14, வடக்கு வட்டார அலுவலகம், மத்திய வட்டார அலுவலகம் மற்றும் தெற்கு வட்டார அலுவலகம் ஆகியவற்றிலிருந்து "இன்மை அறிக்கைகள்" வரப்பெற்றுள்ளது.

மேலும், திரு.P.கனகராஜி, மேற்பார்வையாளர் (மின்சாரம்), மண்டலம் -15 மற்றும் திரு.K.ஆனந்தன், மின்கம்பியாளர், மண்டலம் -10 ஆகியோர்களின் பணிப்பதிவேடு மற்றும் பணிவிவரங்கள் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்பட்டு, துறைத்தலைவர்களின் பரிந்துரையுடன் வரப்பெற்றுள்ளது.

2021 – 2022ஆம் பட்டியலாண்டின் உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள, மேற்குறிப்பிட்டுள்ள 2 நபர்களின் பணிப்பதிவேடுகளை ஆய்வு செய்ததில், தனியர்களின் பணிவிவரங்கள் அடங்கிய அமைந்தப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு குறிப்பு கோப்பில் இணைத்து ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதில், தனியர்களின் பொறியியல் பட்டப்படிப்பு சான்றிதழ்களின் உண்மைத்தன்மை குறித்து தனியர்கள் பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட வேண்டும் என உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தனியர்கள் பயின்ற மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 24.08.2021 நாளிட்ட கடிதம் அனுப்பி, தனியர்களின் கல்விச்சான்றுகள் குறித்த உண்மைத்தன்மை (Genuineness) வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதில், அந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில், தனியர்களின் கல்வி தேர்ச்சி சான்று மற்றும்

**பொ.து.ந.க.எண்.ஈ4/16484/2021**

மதிப்பெண் சான்றுகள் ஆகியவை உண்மைத்தன்மை (Genuineness) மற்றும் தனியர்கள் பகுதிநேரமாக பயின்று தேர்ச்சி பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வு வழங்க, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

அ) 01.07.2021ஐ மைய நாளாக கொண்ட 2021 – 2022ஆம் பட்டியலாண்டின் உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு பணிவிதிகளின்படி, பொறியியல் பட்டப்படிப்பு (B.E./Electrical and Electronics Engineering) தேர்ச்சி பெற்று, பயிற்சி திறனுள்ள உதவியாளர், நிலை I பதவியில் 5 ஆண்டுகள் நிறைவடைந்த கீழ்காணும் 2 நபர்களுக்கு, உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வு வழங்கவும்,

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியுமிடம் | பிறந்த தேதி | கல்வித் தகுதி | கல்வி நிறுவனம் | தேர்ச்சி பெற்ற காலம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | தற்போதைய பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | P.கனகராஜி, மேற்பார்வையாளர் (மின்சாரம்), மண்டலம் -15 | 05.07.1972 | B.E./E.E.E. | Meenakshi Academy of Higher Education and Research | Oct.2020 | 23.02.2006 | (17.06.2010 மின்கம்பியாளர் SAG-I) 14.03.2018 |
| 2 | K.ஆனந்தன், பயிற்சி திறனுள்ள உதவியாளர், நிலை - I, மண்டலம் -10 | 09.05.1974 | B.E./E.E.E. | Meenakshi Academy of Higher Education and Research | Oct.2020 | 23.02.2006 | 17.06.2010 |

ஆ) மேற்படி, உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வு பெறும் நபர்களுக்கு, அப்பதவிக்குண்டான ரூ.37700 – 119500 (Level – 20) என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் ஊதியம் நிர்ணயம் செய்யவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“உதவி பொறியாளர்(மின்சாரம்) பதவி உயர்வு அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

வ.து.ந.க.எண்.எம்1/4015/2012

தீர்மானஎண்.761/2021 நாள்:30-09-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை (த.இ) - அனைத்து சமுதாய நலக்கூடங்கள் மற்றும் கலையரங்கங்கள் வருவாய் துறை தலைமையிடத்தில் முன்பதிவு பணி மேற்கொள்ளப்படுகிறது- இனிவரும் காலங்களில் அந்தந்த வட்டார அலுவலகங்களில் முன்பதிவு செய்வதற்கு - ஆணை பெறப்பட்டது - தற்போது எடுக்கப்பட்ட முடிவின்படி சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் முன்பதிவு செய்வதற்கு அனுமதி.**

மன்றத் தீர்மானம் எண்.264/2012 நாள்.25.07.2012-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சமுதாய நலக்கூடங்களும், கலையரங்கங்களும் ஆணையாளர் அவர்களின் செயல் முறை ஆணை, நாள். 13.08.2012-ன்படி மண்டலம் – 10, வார்டு – 136ல் உள்ள சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கமும் வருவாய் துறை தலைமையிடத்தில் முன்பதிவு செய்யப்படுகிறது.

வட்டாரவாரியாக மற்றும் மண்டலம் வாரியாக சமுதாய நலக்கூடம் மற்றும் கலையரங்கத்தின் எண்ணிக்கை விவர அட்டவணை பின்வருமாறு: (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

| வ. எண் | வட்டாரம் | சமுதாய நலக்கூடங்களின் எண்ணிக்கை | கலையரங்கங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | வடக்கு | 15 | 1 | 16 |
| 2 | மத்தியம் | 33 | 2 | 35 |
| 3 | தெற்கு | 14 | 0 | 14 |
| | மொத்தம் | 62 | 3 | **65** |

**சமுதாய நலக்கூடங்கள் மற்றும் கலையரங்கங்களை முன்பதிவு செய்யும் நடைமுறைகள் பின்வருமாறு:**

**1) இலவசவிண்ணப்பப்படிவம்**

சமுதாய நலக்கூடம்/ கலையரங்கம் முன்பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படவேண்டும்.

**2) இணையதளம் மூலம் முன்பதிவு நிலை அறிதல்:**

சமுதாய நலக்கூடம், காலியாக உள்ளதா அல்லது ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக (www.chennaicorporation.gov.in) பொதுமக்கள் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**3 விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றாவணங்கள்**

நிகழ்ச்சியை முன்பதிவு செய்வதற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள சான்றாவணங்களின் இரண்டு நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்படவேண்டும்.

**வ.து.ந.க.எண்.எம்1/4015/2012**

| முன்பதிவு செய்வதற்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய சான்றாவணங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| சமுதாய நலக் கூடங்கள் | | | | | கலையரங்கம் |
| நிகழ்ச்சியின் பெயர் | 60ம் ஆண்டு திருமணம்/ திருமண வரவேற்பு போன்ற நிகழ்ச்சிகள் | திருமண நிகழ்ச்சி | பிறந்த நாள்/ காதணி விழா/மஞ்சள் நீராட்டு விழா/ நிச்சயதார்த்தம் வளைகாப்பு | இதர நிகழ்ச்சிகள் | சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கம், மண்டலம் -10/ செனாய் நகர் கலையரங்கம், மண்டலம் - 8 |
| இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | முகவரிச் சான்று; (2) நகல்கள் மணமகன் மற்றும் மணமகள் புகைப்படங்கள் (2) | முகவரிச் சான்று; (2) நகல்கள் மணமகன் மற்றும் மணமகள் புகைப்படங்கள்(2), வயது சான்று | முகவரிச் சான்று; (2) நகல்கள் நிகழ்ச்சிக்கு உரியவரின் புகைப்படங்கள்(2) | முகவரிச் சான்று; (2) நகல்கள் நிகழ்ச்சிக்கு அனுமதி வேண்டி விண்ணப்ப கடிதம் மற்றும் காவல் துறை அனுமதி கடிதம் | முகவரிச் சான்று; (2) நகல்கள் நிகழ்ச்சிக்கு அனுமதி வேண்டி விண்ணப்பக் கடிதம் மற்றும் காவல் துறை அனுமதி கடிதம் |

**4) கட்டணம் :**

- வாடகை கட்டணம் :

சமுதாய நலக்கூடகட்டிடத்தின் சதுர அடி மற்றும் அடிப்படை தெரு கட்டணம் (Basic Street Rate) அடிப்படையில் பல்வேறு மன்றத் தீர்மானங்களின் மூலம் வாடகை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (இணையதளம் வாயிலாக சமுதாய நலக்கூட வாடகை GST மற்றும் முன்வைப்பு தொகை விவரம் பட்டியலிடப்பட்டுள்ளது)

மேலும், இனிவரும் காலங்களில் புதியதாக திறக்கப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடத்திற்கு வாடகை கட்டணம் கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். (ஆணையாளரின் செயல்முறை ஆணை, வ.து.ந.க.எண். எம்4/24549/2000, நாள்.31.08.2000)

ஒரு நாள் வாடகை = <u>கட்டிடத்தின் மொத்த சதுர அடி X Basic Street Rate X 12 months</u>
ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள் என்ற அடிப்படையில்

அரைநாள் வாடகை = ஒரு நாள் வாடகை ÷ 2 (Round off to Rs. 10)

- ·சரக்கு மற்றும் சேவை வரி கட்டணம் : (GST)

நடைமுறையில் உள்ள சரக்கு மற்றும் சேவை வரி விழுக்காட்டின்படி வாடகை கட்டணத்தில் 18 சதவிகிதம் சேவை வரி தனியாக பெறப்படவேண்டும்.

- ஒலி பெருக்கிக் கட்டணம்: ரூ. 2500/-(P.A system for Auditorium only)

ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை, நாள். 13.08.2012-ன்படி மண்டலம்-10, வார்டு-136, ஜி.என்.செட்டி சாலையில் உள்ள சர். பிட்டி தியாகராயர் கலையரங்கத்திற்கு வாடகை கட்டணத்துடன் P.A System கட்டணமும் சேர்த்து பெறப்படுகிறது. ஒரு நாள் வாடகை ரூ.15,000+2,500=17,500/- மற்றும் அரை நாள் வாடகை ரூ.8,000+2,500=10,500

மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள்.27.02.2015-ன்படி மண்டலம் -8, வார்டு -101 செனாய் நகர் அம்மா கலையரங்கத்திற்கு நாள் வாடகை கட்டணத்துடன் P.A System கட்டணமும் சேர்த்து பெறப்படுகிறது.

ஒரு நாள் வாடகை ரூ. 2,50,000+15,000= 2,65,000/- மற்றும் 4 மணி நேர வாடகை ரூ.30,000+ 5000=35,000

**வ.து.ந.க.எண்.எம்1/4015/2012**

**முன்வைப்பு தொகை : (Security Deposit)**

மன்ற தீர்மான எண்.632/2013, நாள்.28.09.2013-ன்படி சமுதாய நலக்கூடத்திற்கான ஒரு நாள் வாடகை கட்டணம் ரூ.2,000/-க்கு குறைவாக இருக்கும்பட்சத்தில் ரூ.1,000/-யும் (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) ஒரு நாள் வாடகை கட்டணம் ரூ.2,000/-க்கு அதிகமாக இருக்கும்பட்சத்தில் ரூ.1,500/- (ரூபாய் ஒரு ஆயிரத்து ஐநூறு மட்டும்)யும் முன்வைப்புத் தொகையாக பெறப்பட வேண்டும்.

குறிப்பு: ஆணையாளர் அவர்களின் செயல் முறை ஆணை, நாள். 13.08.2012-ன்படி மண்டலம்-10, வார்டு-136, சர் பிட்டி தியாகராயர் கலையரங்கத்திற்கு ரூ.15,000மும், மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள்.27.02.2015-ன்படி மண்டலம்-8, வார்டு-101, செனாய் நகர் (குளிர்சாதன வசதி) கலைரங்கத்திற்கு ரூ.20,000மும், மண்டலம்-10, வார்டு-132, டாக்டர் அம்பேத்கர் சாலை சமுதாய நலக்கூடத்திற்கு ரூ.20,000மும் முன்வைப்புத் தொகை பெறப்பட வேண்டும்.

**5) கட்டணம் செலுத்தும் முறை (Mode of payment)**

- வாடகை கட்டணம், சரக்கு மற்றும் சேவை வரி கட்டணம் ஆகியவற்றை தனித்தனியாக ஏதேனும் ஒரு வங்கியிலிருந்து "REVENUE OFFICER, CORPORATION OF CHENNAI" என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand Draft)-யும் முன்வைப்பு தொகைக்கு தனியாக ஒரு வரைவோலையும் (Demand Draft) பெறப்பட வேண்டும்.
- வங்கி காசோலை (Bank Cheque)அல்லது ரொக்கம் (Cash) பெறப்படுவதில்லை.

**6) ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை, நாள்.13.08.2012-ன்படி சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கம் / செனாய் நகர் கலையரங்கம் முன்பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் :**

அரசு நிகழ்ச்சிகள் தவிர பிற அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படக்கூடாது.

இயல், இசை, நாடகம், கலை, இலக்கியம், நடனம், (cultural) கருத்தரங்கம் (Conference), விழிப்புணர்வு கூட்டங்கள் (Awareness programme), புத்தக வெளியீட்டு விழா (Book release) போன்ற நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே முன்பதிவு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

மதம் சார்புடைய சொற்பொழிவு கூட்டங்கள் (Religious speeches) நடத்த அனுமதிக்கப்படக்கூடாது.

விளம்பர நோக்குடன் செயல்படும் நிகழ்ச்சிகள் (Publicity materials) நடத்த அனுமதிக்கப்படக்கூடாது.

பொருட்களை விற்பனை செய்வது (Selling goods) போன்ற நிகழ்ச்சிகள் நடத்த அனுமதிக்கப்படக்கூடாது.

பிறந்த நாள் / காதணி விழா / மஞ்சள் நீராட்டு விழா / நிச்சயதார்த்தம் / திருமணம் / திருமண வரவேற்பு போன்ற குடும்ப நிகழ்ச்சிகள் (family functions) நடத்த அனுமதிக்கப்படக்கூடாது.

கலையரங்கத்தில் உணவுப் பொருள்கள் (food items) பயன்படுத்த அனுமதிக்கப்படக்கூடாது.

எவ்விதமான சூழ்நிலையிலும் கலையரங்கத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கைக்கு மிகையாக நபர்கள் அனுமதிக்கப்படக்கூடாது.

சர். பிட்டி தியாகராயர் கலையரங்கம் நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு நாள் மட்டுமே வாடகைக்கு விடப்பட வேண்டும்.

**மண்டலம் - 8, வார்டு - 101 ல் உள்ள செனாய் நகர் கலையரங்கம் பின்வரும் மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.**

- மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள்.27.02.2015-ன்படி செனாய் நகர் கலையரங்கத்திற்கு பொதுமக்களின் நிகழ்ச்சிக்களுக்குண்டான வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

- ❖ மன்றத் தீர்மான எண்.143/2015. நாள்.30.4.2015-ன்படி செனாய் நகர் கலையரங்கத்தில், அரசு / அரசு பொதுத் துறை நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள்.27.02.2015-ன்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகை தவிர்த்து இதர கட்டணங்கள் மட்டும் செலுத்துவதற்கு சலுகை வழங்கி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது.
- ❖ மன்றத் தீர்மானம் எண்.521/ 2016, நாள்.9.9.2016-ன்படி மத்திய அரசு / மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் இதர பொது துறை நிறுவனங்களால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு மன்ற தீர்மான எண்.93/2015, நாள். 27.02.2015ன்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகையில் 50 சதவிகிதம் சலுகையுடன் இதர கட்டணங்கள் செலுத்துவதற்கு சலுகை வழங்கியும், கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது.

**மண்டலம் - 5 வார்டு - 58ல் உள்ள ரிப்பன் கட்டிடத்திலுள்ள அம்மா மாளிகையில் உள்ள கலையரங்கத்தினை முன்பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

மன்ற தீர்மான எண்.598/2017, நாள். 20.09.2017, ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர் / 2151/2017-ன்படி மண்டலம் - 5 வார்டு - 58ல் உள்ள அம்மா மாளிகையில் உள்ள கலையரங்க முன்பதிவானது தலைமை அலுவலகத்தில் உள்ள கட்டிடத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது-

அரங்கத்தின் பராமரிப்பு பணி மற்றும் வாடகைக்கு ஒதுக்கீடு பெறுவோருக்கு சாவியினை வழங்குதல் மற்றும் விழா முடிவடைந்த பின்னர் சாவியினை திரும்ப பெறும் பணி, சேதம் ஏற்பட்டிருப்பின் அத்தொகையினை கணக்கிட்டு வருவாய் துறைக்கு தெரிவிக்கும் பணி ஆகியவை தலைமை அலுவலகத்தில் உள்ள கட்டிடத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது-

| வ. எண். | பொருள் | வாடகை தொகை ரூபாயில் | | |
|---|---|---|---|---|
| | | முழு நாள் | 12 மணி நேரம் | 4 மணி நேரம் |
| 1. | வாடகை (Rent) | 1,80,000 | 1,00,000 | 40,000 |
| 2. | பராமரிப்பு செலவு (Cleaning Charges) | 10,000 | 10,000 | 3,500 |
| 3. | ஒலி அமைப்பு (P.A. System) | 15,000 | 10,000 | 7,500 |
| 4. | மின் கட்டணம் ( E.B. Charges) | 30,000 | 15,000 | 5,000 |
| 5. | மொத்தம் | 2,35,000 | 1,35,000 | 56,000 |
| | சரக்கு மற்றும் சேவை வரி (GST) (வரிசை எண்/1 முதல் 4) 18% | 42,300 | 24,300 | 10,080 |
| | **வைப்பு தொகை (Refundable)** | **20,000** | **20,000** | **20,000** |

**தமிழக அரசின் துறை நிகழ்ச்சிகளுக்கான கட்டண விவரம்**

| வ. எண். | பொருள் | வாடகை தொகை ரூபாயில் | | |
|---|---|---|---|---|
| | | முழு நாள் | 12 மணி நேரம் | 4 மணி நேரம் |
| 1. | வாடகை (Rent) | 100% Concession | | |
| 2. | பராமரிப்பு செலவு (Cleaning Charges) | 10,000 | 10,000 | 3,500 |
| 3. | ஒலி அமைப்பு (P.A. System) | 15,000 | 10,000 | 7,500 |
| 4. | மின் கட்டணம் ( E.B. Charges) | 30,000 | 15,000 | 5,000 |
| 5. | மொத்தம் | 55,000 | 35,000 | 16,000 |
| | சரக்கு மற்றும் சேவை வரி (GST) (வரிசை எண்/1 முதல் 4) 18% | 9,900 | 6,300 | 2,880 |
| | **வைப்பு தொகை (Refundable)** | 20,000 | 20,000 | 20,000 |

<u>வ.து.ந.க.எண்.எம்1/4015/2012</u>

**மத்திய அரசின் துறை நிகழ்ச்சிகளுக்கான கட்டண விவரம்**

| வ. எண். | பொருள் | வாடகை தொகை ரூபாயில் | | |
|---|---|---|---|---|
| | | முழு நாள் | 12 மணி நேரம் | 4 மணி நேரம் |
| 1. | thlif (Rent) (50% concession) | 90,000 | 50,000 | 20,000 |
| 2. | பராமரிப்பு செலவு (Cleaning Charges) | 10,000 | 10,000 | 3,500 |
| 3. | ஒலி அமைப்பு (P.A. System) | 15,000 | 10,000 | 7,500 |
| 4. | மின் கட்டணம் ( E.B. Charges) | 30,000 | 15,000 | 5,000 |
| **5.** | மொத்தம் | **55,000** | **35,000** | **16,000** |
| | சரக்கு மற்றும் சேவை வரி (GST) (வரிசை எண்/1 முதல் 4) 18% | **26,100** | **15,300** | **6,480** |
| | வைப்பு தொகை **(Refundable)** | **20,000** | **20,000** | **20,000** |

**7. பொதுவான நிபந்தனைகள் (விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு- இணைப்பு)**

**8) மன்றத் தீர்மானம் எண்.570/13, நாள்.29.08.2013-ன்படி முன்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிக்கான நாள் மாற்றம் செய்தல் ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படுகிறது.**

சமுதாய நலக்கூடம் / கலையரங்கம் ஆகியவற்றின் முன்பதிவினை விண்ணப்பதாரரால் ரத்து செய்யக் கோரும்பட்சத்தில் விண்ணப்பதாரர் கோரும் வேறு நாளில் அதே சமுதாய நலக்கூடம் / கலையரங்கம் ஏற்கனவே முன்பதிவு செய்யாமல் காலியாக இருக்கும்பட்சத்தில் கூடுதல் கட்டணம் ஏதும் இன்றி வேறு தேதியில் முன்பதிவு செய்வதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்பட வேண்டும்.

**9) கணினியில் முன்பதிவு செய்து விண்ணப்பதாரருக்கு உத்தரவு வழங்குதல்**

முன்பதிவு செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள சான்றாவணங்கள் மற்றும் சமுதாய நலக் கூடத்திற்குரிய கட்டணத் தொகைகள் (கட்டிட வாடகை + சரக்கு மற்றும் சேவை வரி + முன்வைப்பு தொகை) ஆகியவற்றிற்குண்டான வங்கி வரைவோலைகள் பெற்று முறையாக பரிசீலனை செய்த பின்னர் தகுதியுள்ள விண்ணப்பத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கான இணையதளம் வாயிலாக கணினியில் பதிவு செய்து விண்ணப்பதாரருக்கு ஒதுக்கீடு உத்தரவு விரைவாக வழங்கப்பட வேண்டும். அதன் நகல் மற்றும் முன் வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை சம்பந்தப்பட்ட சமுதாய நலக்கூடங்கள் அமைந்துள்ள மண்டல அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**10) சமுதாய நலக்கூடம் / கலையரங்கத்தின் சாவி நிகழ்ச்சி நடத்த அனுமதி பெற்றவரிடம் வழங்குதல் மற்றும் திரும்ப பெறுதல்**

சுற்றறிக்கை வ.து.ந.க.எண்.எம்4/3372/2017, நாள்.23.04.2018 மற்றும் சுற்றறிக்கை வ.து.ந.க.எண்.எம்4/2825/2018, நாள்.18.11.2019-ன்படி சமுதாய நலக்கூடம் / கலையரங்கத்தினை வாடகைக்கு ஒதுக்கீடு பெறும் விண்ணப்பதாரர், முன்பதிவு உத்தரவு பெற்றவுடன் சம்பந்தப்பட்ட வார்டு இளநிலை / உதவி பொறியாளரை அணுகி, நிகழ்ச்சியின் போது சமுதாய நலக்கூட / கலையரங்க சாவியினை பெற்றுக்கொள்ள வேண்டும். நிகழ்ச்சி முடிந்ததும் சாவி திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

**11) கட்டணத் தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துதல்**

. விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்பட்ட வங்கி வரைவோலைகளை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் குறிப்பிட்ட கணக்கில் உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டும். (முன்பணத் தொகைக்கான வங்கி வரைவோலையை சம்பந்தப்பட்ட சமுதாய நலக்கூடம் அமைந்துள்ள மண்டல வருவாய் துறைக்கு அனுப்பப்பட வேண்டும்.)

கட்டிட வாடகைக்கு கணக்கு குறியீட்டு எண் 130100400, சரக்கு மற்றும் சேவை வரிக்கு கணக்குக் குறியீட்டு எண் 350200306. செனாய் நகர் கலையரங்க மின்சார கட்டண குறியீட்டு எண்.180801101

**12) முன்வைப்புத் தொகை திரும்ப வழங்குதல்**

நிகழ்ச்சி முடிந்தவுடன் நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்குண்டான தொகை (Electricity consumption charges) மற்றும் இழப்பீட்டுத் தொகை (Damage Charges) ஏதேனும் இருப்பின் அதற்குண்டான தொகையை கருவூலத்தில் செலுத்தி ரசீது வழங்கப்பட்ட பின்பு முன்வைப்பு தொகை மண்டல வருவாய் துறையினால் விண்ணப்பதாரருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**13 சமுதாய நலக்கூடம் / கலையரங்கம் பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு பணி**

சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 9.2.2015 நாளிட்ட செயல்முறை ஆணையில் அறிவுறுத்தியவாறு சமுதாய நலக்கூடங்களில் உள்ள தளவாட பொருட்களை, சம்பந்தப்பட்ட கோட்ட வரி வசூலிப்பவர், வரி மதிப்பீட்டாளர் முதற் கொண்டு உயர் அதிகாரிகள் அவ்வப்போது இருப்பு பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்றும் சமுதாய நலக் கூடம் மற்றும் கலையரங்கம் அமைந்துள்ள கோட்டத்தில் கேர் டேக்கர் பணியாளர்களை பணியமர்த்தும் காலம் வரை சொத்து வரி வசூல் செய்யும் வரி வசூலிப்பவர்கள் அக்கோட்டத்தில் உள்ள சமுதாய நலக்கூடம்/கலையரங்கம் ஆகியவற்றிற்குண்டான பணிகளை கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலை தொடர்ந்து மண்டல அலுவலவலங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

முன்பதிவில் அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் நிபந்தனைகளை கண்காணிக்கும் பணி மற்றும் சமுதாய நலக்கூடங்களின் பராமரிப்புப் பணிகள் யாவும் தொடர்ந்து மண்டல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், சமுதாய நலக்கூடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை கண்காணிக்கும் பணி சம்பந்தப்பட்ட மண்டலங்களில் உள்ள வருவாய் துறை பணியாளர்கள் மற்றும் உதவி / இளநிலை பொறியாளர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், நிகழ்ச்சிக்கு தொடர்பில்லாத பிற நபர்கள் எவரையும் சமுதாய நலக்கூடத்தில் அனுமதிக்கக்கூடாது எனவும், சமுதாய நலக்கூடத்தில் வழங்கும் இலவச பொருட்கள் தவிர்த்து தேவைப்படும் பிறப்பொருட்களை நிகழ்ச்சிக்கு முன்பதிவு செய்தவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

அனைத்து சமுதாய நலக்கூடங்களிலும் நிகழ்ச்சிக்கான கட்டண விவரங்கள் நிகழ்ச்சிக்காக வழங்கப்படும் இலவச பொருட்களின் விவரங்கள் மற்றும் புகார் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் அறிவிப்பு பலகையில் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டும்.

**14 தளவாடப் பொருட்கள் விவரம்**

தற்போது பயன்பாட்டில் உள்ள சமுதாய நலக்கூடங்களில் 41 பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு சமுதாய நலக்கூடங்களில் பொதுமக்களின் நிகழ்ச்சிக்கு சமையல் பாத்திரங்கள், மேஜை நாற்காலிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. சமூக நலக்கூடங்களை முன்பதிவு செய்து ஆணை பெற்றவர்களுக்கு நிகழ்ச்சிக்கு தேவையான தளவாடப் பொருட்களான மேஜை, நாற்காலி மற்றும் சமையல் பாத்திரங்கள் ஆகியவை வார்டு வரி வசூலிப்பவர் / உதவி பொறியாளர் மூலம் இலவசமாக கொடுக்கப்பட்டு நிகழ்ச்சி முடிந்தவுடன் திரும்ப பெறப்பட வேண்டும்.

இதர சமுதாய நலக்கூடங்களான, மண்டலம் -3 வார்டு 23, 24 மற்றும் 29ல் உள்ள 3 சமுதாய நலக்கூடங்களில் தளவாட சாமான்கள், சமையல் பாத்திரங்கள் ஆகியவை வைக்க போதிய இடவசதி இல்லாததால் பொருட்கள் வாங்கவில்லை. மண்டலம் -4 வார்டு 37ல் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொருட்கள் வாங்கவில்லை. மேலும் புதியதாக திறக்கப்பட்ட சமுதாய நலக்கூடங்களுக்கும் இதுவரை தளவாட சமான்கள் வாங்கவில்லை.

மன்ற தீர்மானம் எண்.199/2013, நாள்.26.04.2013ஐ நிறைவேற்றும் பொருட்டு நிகழ்ச்சிக்கு முன்பதிவு மேற்கொள்ளப்பட்ட நபருக்கு தளவாட சாமான்கள் வழங்கியும் நிகழ்ச்சி முடிந்தவுடன் திரும்ப பெறுவதற்கும் தற்காலிக ஏற்பாடாக சம்பந்தப்பட்ட வரி வசூலிப்பவர் மூலமாக மேற்கொள்ள அனைத்து மண்டல அலுவலர்களை அறிவுறுத்தி சுற்றறிக்கை 9.6.2017 அன்று அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15) பணியாளர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு வாடகை கட்டணத்தில் வழங்கப்படும் சிறப்பு சலுகை**

மன்றதீர்மானம் எண். 469/98, நாள். 26.06.98- ன்படி சென்னை மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு வாடகையில் 75 விழுக்காடு சலுகை வழங்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருக்கும் ஊழியரின் திருமணம் மற்றும் ஊழியரின் வாரிசுதாரர்கள் திருமணம் மற்றும் குடும்ப நிகழ்ச்சிக்காக முன்பதிவு செய்ய துறைத் தலைவரின் / மண்டல அலுவலரின் பரிந்துரைக் கடிதம், ஊழியரின் அடையாள அட்டை நகல், பணிப்பதிவேட்டின் முதல் இரண்டு பக்கங்களின் நகல், (Nomination Form) கடைசியாக பெற்ற சம்பளம் விவரப் பட்டியல் ஆகியவை பெற்ற பின்பு முன்பதிவு செய்யப்பட வேண்டும். (இது சர். பிட்டி தியாகராயர் கலையரங்கம் மற்றும் செனாய் நகர் அம்மா கலையரங்கம் தவிர மற்ற சமுதாய நலக்கூடங்களுக்கு மட்டும் பொருந்தும்)

மன்றத் தீர்மானம் எண்.469/98, நாள்.26.06.98ன்-படி மன்ற உறுப்பினர் திருமணம் மற்றும் மன்ற உறுப்பினரின் வாரிசுதாரர்கள் திருமணம் மற்றும் குடும்ப நிகழ்ச்சிக்காக மன்றச் செயலரின் பரிந்துரை கடிதம் பெற்ற பின்பு முன்பதிவு செய்யப்பட வேண்டும்.

**16) புதிய சமுதாய நலக்கூடம் வாடகை நிர்ணயம் செய்யும் நடை முறை**

1. சமுதாய நலக்கூட கட்டுமான பரப்பளவு, தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றின் மொத்தப் பரப்பளவு மற்றும் புகைப்படம் குறிப்பிட வேண்டும்.
2. சமுதாய நலக்கூட அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின் சாதன வசதி கழிவுநீர் வசதி, குளியல் அறை, சமையல் அறை, பாத்திரங்கள் வைப்பதற்கான இடம் மற்றும் உணவருந்தும் இடம் போன்றவற்றின் விவரம் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
3. சமுதாய நலக்கூடத்தின் வரவேற்பு பகுதி மற்றும் உணவருந்தும் பகுதி அமரும் நபர்கள் எண்ணிக்கை இருக்கை எண்ணிக்கை குறிப்பிட வேண்டும்.
4. சமுதாய நலக்கூடத்தின் தெளிவான வரைபடம்(Sketch)
5. சமுதாய நலக்கூடம் தளவாட சாமான்கள் தவிர்த்து மின்சார இணைப்பு, மின் விளக்கு, கழிவறை, மின் விசிறி, மணமகன் அறை மற்றும் மணமகள் அறை, போன்ற அத்தியாவசிய வசதிகள் அமைய பெற்றிருக்க வேண்டும்.

மேலும், சமுதாய நலக்கூடத்தில் நடத்தப்படும் சுப நிகழ்சிகளுக்கு வாடகை மட்டுமே பொருந்தும் மற்றும் நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம் கணக்கிட்டு நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்பட வேண்டும்.

**பிற நிபந்தனைகள்:**

1. அரசியல் நிகழ்ச்சிகள், வணிக ரீதியான நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2. பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள் இயற்கை இடர்பாடுகளின் போது மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமுதாய நலக்கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்பட வேண்டும்.
3. வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடம் பயன்படுத்திட வேண்டும்.

4. சமுதாய நலக்கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால், அதற்குரிய தண்டத்தொகை வசூலிக்கப்பட்டு சீர்செய்யப்பட வேண்டும்.

**17) முன்பதிவு செய்வதற்கான கால வரையறை**

- சமுதாய நலக் கூடங்கள் முன்பதிவு செய்ய நிகழ்ச்சி நடைபெறும் நாளுக்கு ஆறு மாத காலத்திற்குள்ளும், கலையரங்கம் மூன்று மாத காலத்திற்குள்ளும் முன்பதிவு செய்யப்பட வேண்டும்.
- சமுதாய நலக் கூடம் ஒரு நபருக்கு அதிகபட்சம் 72 மணி நேரத்திற்கு (மூன்று நாட்கள்) மட்டுமே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.
- சர். பிட்டி தியாகராயர் கலையரங்கம் ஒரு நபருக்கு காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அல்லது மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை அல்லது அதிகபட்சம் காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மட்டுமே முன்பதிவு செய்யப்பட வேண்டும்.

**18. சரக்கு மற்றும் சேவை வரித் துறைக்கு சேவை வரி செலுத்துதல் *(payment of GST and filing of returns)***

முன்பதிவிற்காக பெறப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரித் தொகையினை மாதந்தோறும் 10-ந்தேதிக்குள் நிதி நிர்வாக பிரிவு அலுவலகத்தின் ஒப்புதல் பெற்று அப்பிரிவின் மூலமாக சரக்கு மற்றும் சேவை வரித் துறைக்கு இணையதளம் (online) மூலம் செலுத்துவதும், குறிப்பிட்ட காலத்திற்குள் GST return-ம் அதற்குண்டான படிவத்தில் அவ்வப்போது சேவை வரி துறையினால் விதிக்கப்படும் விதிகளின்படி தாக்கல் செய்யப்படுகிறது. இவற்றின் விவரங்களை நிதி மேலாண்மை குழுமத்திலிருந்து பெறப்பட்டு வருவாய் துறை (தலைமையிடத்தில்) மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்து பணிகளும் மண்டல அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படும் நிலையில் மண்டலம் 1 முதல் 15 வரையிலான சமுதாய நலக்கூடங்கள் / கலையரங்கங்கள் ஆகியவற்றிற்கான முன்பதிவு மட்டும், ரிப்பன் மாளிகையில் உள்ள வருவாய் துறை தலைமையிடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் மேற்படி பகுதிகளில் உள்ள சமுதாய நலக்கூடங்களில் முன்பதிவு குறைவாக காணப்படுகிறது.

எனவே பொதுமக்களின் சிரமத்தினை தவிர்க்கும் பொருட்டு சமுதாய நலக்கூடங்கள் / கலையரங்கங்கள் ஆகியவை இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலக வருவாய் பிரிவில் பொதுமக்களின் நிகழ்ச்சிகளுக்கு முன்பதிவு பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சமுதாய நலக்கூடங்கள் / கலையரங்கங்கள் முன்பதிவினை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகம் மூலம் மேற்கொள்ள, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ம.அ.15ந.க.எண்.பி1/0762/2021**

**தீர்மானஎண்.762/2021** **நாள்:30-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம் - 15 , பகுதி - 45 , கோட்டம் - 193, ராஜீவ்காந்தி சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம் – 15 , பகுதி – 45 , கோட்டம் – 193 , ராஜீவ்காந்தி சாலையில் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள 135. 24 சமீ பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தால் 1997ல் கட்டடப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை, எண்.ந.க.எண்.ஜே10/24673.2019, நாள்.26.08.2020–ல் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் கோட்டப்பொறியாளர் அவர்களின் 17.11.2020 நாளிட்ட கடிதத்தில் ராஜீவ்காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலையினை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிக்காக ராஜீவ்காந்தி சாலையில் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள 135. 24 சமீ பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் இடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் ராஜீவ்காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலையினை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிக்காக இக்கட்டிடம் இடிக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய இக்கட்டிடத்தின் புத்தக மதிப்பு ஏதுமில்லை. ஆதலால் 135.24 சமீ பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

**********

**ம.அ3.ந.க.எண்.சி1/4305/2021**

**தீர்மான எண். 763/2021** **நாள்:30-09-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6, 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட சாலை பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் ஆகியோரது (NULM) பணிக்காலம் 31.08.2021 உடன் முடிவடைவது - 01.09.2021 முதல் 30.11.2021 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-22 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் முக்கியமான தெருக்களை தவிர அனைத்து தெருக்களிலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அவசரம் கருதி ஆணையர் அவர்களின் 29.07.2016 நாளிட்ட குறிப்பின் படியும், மன்றத் தீர்மான எண்.422/2016, நாள்.30.07.2016ன் படியும், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) தற்காலிக பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-3 , வார்டு 22 முதல் 33 வரை 12 வார்டுகளில் அனைத்து களப்பணிகளையும் திறம்பட மேற்கொள்ள ஏற்கனவே பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர்களை தவிர்த்து துப்புரவு பணிக்கு 521 பணியாளர்கள் , சாலை பணிக்கு 94 பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிக்கு 44 பணியாளர்கள் மற்றும் பூங்கா பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்கள் என கூடுதலாக 671 தற்காலிக (NULM) பணியாளர்களை பணி அமர்த்தி அனைத்து பணிகளையும் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்தது. 27-02-2021 முதல் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின்படி 521 தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 28-02-2021 உடன் நிறைவடைந்தது. மேற்படி 521 துப்புரவு பணியாளர்கள் தவிர்த்து சாலைப்பணியாளர்கள், மழைநீர் வடிகால் பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், போன்றவர்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு முறையே பின் வருமாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இவர்களை NULM திட்டத்தின் கீழ் பணி அம்ர்த்தலாம், (சாலைப்பணியாளர்கள் 94 , மழைநீர் வடிகால் பணியாளர்கள் 44 , பூங்கா பணியாளர்கள் 12).

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ROC.C2/7393/2018 நாள் 07-07-2020ல் வரிசை எண்.64ன் படி, துப்புரவு மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- எனவும், மேற்படி பணிகளுக்கு என பணியமர்த்தப்படும் சாலை பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் பணி ,பூங்கா பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- என நிர்ணயிக்கலாம். மேலும், சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 133/2021 . நாள்:08.02.2021ல் கண்டுள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) 94 சாலை பணியாளர்கள், 44 மழை நீர் வடிகால் வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் என மொத்தம் 150 தற்காலிக பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்) பகுதி 6, 7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பராமரிப்பு பணி, மழை நீர் வடிகால் வாய் பணி பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 மாத காலத்திற்கு 01.09.2021 முதல் 30.11.2021 வரை (91 நாட்களுக்கு) பணியமர்த்தலாம் என கருதப்படுகிறது.

**ம.அ3.ந.க.எண்.சி1/4305/2021**

மேற்படி 150 பணியாளர்களின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியாளர் விவரம் | தற்போது பணி புரிந்து வரும் பணியாளர்கள் | | | மொத்த NULM பணியாளர்கள் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தர பணியாளர்கள் | NULM | மொத்தம் | | |
| 1 | சாலை பணியாளர் | 41 | 94 | 135 | 94 | (94x391x91) Rs.33,44,614/- |
| 2 | மழைநீர் கால்வாய் பணியாளர் | 0 | 44 | 44 | 44 | (44x391x91) Rs.15,65,564/- |
| 3 | பூங்கா பணியாளர் | 0 | 12 | 12 | 12 | (12x391x91) Rs. 4,26,972/- |
| மொத்தம் | | | 150 | 191 | 150 | Rs.53,37,150/- |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 94 பணியாளர்களுக்கு ரூ. 33,44,614/- , மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 44 பணியாளர்களுக்கு ரூ.15,65,564/- 12 பூங்கா பணியாளர்களுக்கு ரூ. 4,26,972/- ஆக மொத்தம் 91 நாட்களுக்கு ரூ. 53,37,150/- தோராய செலவு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணிக்காக கணக்கு தலைப்பு எண். 20-21-07 கணக்கு குறியிட்டு எண் 210-100-603ன் கீழ் 2021-22 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 1,07,91,600/- நிதி ஒதுக்கப்பட்டு தற்போது ரூ. 24,45,532/- இருப்பில் உள்ளது. மேற்படி கடந்த 31.08.2021 வரை பணியாற்றி உள்ள 150 பணியாளர்களுக்கு ரூ.17,79,050/- சம்பள தொகை வழங்கப்பட உள்ளது மீதம் ரூ.6,66,482/-

எனவே,

1 மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 94 சாலை பணியாளர்கள், 44 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் ஆக மொத்தம் 150 பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்), பகுதி 6,7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பராமரிப்பு பணி , மழைநீர் கால்வாய் பணி மற்றும் பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 மாத காலத்திற்கு 01.09.2021 முதல் 30.011.2021 வரை 91 நாட்களுக்கு பணியமர்த்தவும், 01.09.2021 அன்று முதல் இப்பணிக்கு அனுமதி வேண்டியும்,

2 மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக 94 சாலை பணியாளர்கள், 44 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள், 12 பூங்கா பணியாளர்கள் என 150 தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ.391/- வீதம் 150 பணியாளர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு ( 91 நாட்கள் ) ஆகும் செலவுத் தொகை 391 x 150 x 91 நாட்கள் = ரூ . 53,37,150/- ( ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து நூற்றி ஐம்பது மட்டும்) ஆகும். இதற்கு சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் அனுமதி பெறவும், எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

3 இப்பணிக்கான செலவினங்களை கீழ்கண்ட கணக்கு தலைப்பில் மேற்கொள்ளவும்,

**ம.அ3.ந.க.எண்.சி1/4305/2021**

| வ.எண் | பணி விவரம் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | சாலை பணி, மழைநீர் வடிகால் மற்றும் பூங்கா பணி | 20-21-07 | 210-100-603 |

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *